
# திருக்கோயில்



ஜூலை
2000

விலை
ரூபாய் ஐந்து




அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ராஜ அலங்காரத் தோற்றம்



# திருக்கோயில்



திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை 42 | திருவள்ளுவர் ஆண்டு 2031 ஜூலை 2000 | விக்ரம ஆண்டு ஆடி | மணி 7 |
|---|---|---|---|

சிறப்பாசிரியர்

**திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.**
ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

**பழநி அருள்மிகு**
**தண்டாயுதபாணி சுவாமி**

## பொருளடக்கம்

நினைப்பது ஒன்று கேட்பது ஒன்று
– திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர்

அதிசயம் அநேகமுற்ற பழநியில் அற்புதத் திருக்குட நீராட்டு விழா
- முனைவர் த. அமிர்தலிங்கம்

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நிறுவப்பட்டுள்ள பதினெண் சித்தர்கள் பற்றிய சிறுகுறிப்பு
- செவ்வேள்

மாமயிலை வெள்ளீசுவரர் மலரடி போற்றுவோம்
- டாக்டர் வ. ஹேமா, எம்.ஏ., எம்.எட்., பி.எச்.டி.,

அருள்மிகு வாழைத் தோட்டத்து ஐயன் கோவில்
- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியம்

வாசகர் எண்ணங்கள்

இமாலயச்செலவு - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஸ்ரீமந் நாதமுனிகள் - திருமதி கோமதி ராகவன்

கம்பரின் இராமாவதாரம் - கம்பன் கவிநயமணி
வே. தியாகராஜன்


கல்கியாய் வா கண்ணா! - கவிஞர் துரை. நாச்சிமுத்து

வினாவும் விளக்கமும் - பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்,
எம்.ஏ., டி.லிட்., பி.எச்.டி.,

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
**திருக்கோயில்**
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

# நினைப்பது ஒன்று கேட்பது ஒன்று

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையாளர் அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 34.



விரும்பாததைக் கேட்டுப் பாசாங்கு செய்கின்றேன்
விரும்பியதை வஞ்சகமாகச் சொல்லாமல் இருக்கின்றேன்
கேட்டதே கிடைத்தால் ஏமாற்றம் அடைகின்றேன்
கிடைத்தது விரும்பியதானால் மகிழ்ச்சியில்
திளைக்கின்றேன்.

வெற்றிமேல் வெற்றி பெறுவதற்கே நினைக்கிறேன்
பெற்றியும் கிடைத்திடப் பேரார்வம் காட்டுகின்றேன்
முப்பொழுதும் இதற்காக உன்னையே தேடுகின்றேன்
எப்பொழுதும் உன்னுடைய ஆதரவை நாடுகின்றேன்.

ஆபத்து வந்தால் மட்டுமே நினைக்கின்றேன்
ஆனாலும் விலகினால் விரைவில் மறக்கின்றேன்
பத்தும் செய்கின்ற பணத்தை வேண்டுகின்றேன்
பத்தாது பத்தாது என்று பரிதவிக்கின்றேன்.

வீடுபேறு கேட்கின்றேன் வீட்டையே விரும்புகின்றேன்
ஏடளவில் என்னைப் பக்தனென்று காட்டுகின்றேன்
அறியாமையால் உன்னை ஏமாற்ற நினைக்கின்றேன்
அறிவு தந்து ஆளாக்க வேண்டுகின்றேன்.

கண்டித்து என்னைத் திருத்திடக் கேட்கின்றேன்
தண்டித்து என்னைத் தூயனாக்க விழைகின்றேன்
அண்டிவரும் என்னை ஆதரிக்க இறைஞ்சுகின்றேன்
கண்டிப்பாய் என்னை ஆட்கொள்ள வேண்டுகின்றேன்.

***

# அதிசயம் அநேகமுற்ற பழநியில் அற்புதத் திருக்குட நீராட்டு விழா

- முனைவர் த. அமிர்தலிங்கம், [redacted]

கலியுகவரதனும், கண்கண்ட தெய்வமுமான பழநி ஞானதண்டாயுதபாணி நம் தமிழ்மக்களின் உள்ளங்களில் எல்லாம் நிறைந்து விளங்கும் ஒப்பற்ற தெய்வம் ஆவார்.

தலைமைச் சங்கப்புலவரான நக்கீரர், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடியுள்ள திருமுருகாற்றுப்படையில் மூன்றாம் படைவீடாகப் பழநியைப் போற்றிப் பழநி முருகரையும் ''அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருகன்'' எனப் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மிக அதிகமான திருப்புகழ்களில் - அருணகிரிநாதர் 96 திருப்புகழ்ப் பாடல்களில் பழநியைப் போற்றிப் பாடி

''காசியில் மீறிய பழனாபுரி''
''பதிநால் உலகோர் ஏத்தும் பழனாபுரி''
''அதிசயம் அநேகமுற்ற பழநி''

எனப் புகழ்ந்திருப்பதும் நாம் நினைந்து மகிழத்தக்க அரிய தொடர்களாகும்.

பழநியை வணங்காதவர்க்கு முத்தி இல்லை என்பது அருணகிரிநாதர் அருள்வாக்கு.

''படிக்கின்றிலை பழநித் திருநாமம்
படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை
முசியாமல் இட்டு
மிடிக்கின்றிலை பரமானந்தம்
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சம் ஏது
நமக்கினியே''

என்பது அருணகிரிநாதர் அருளியுள்ள கந்தர் அலங்காரப் பாடல் ஆகும்.

உலகெங்கிலுமுள்ள புண்ணியத் தலங்கள் எல்லாவற்றையும் வாழ்நாள் முழுவதும் தரிசித்து உணங்கினால் பெறக்கூடிய திருவருளைப் பழநித் திருத்தலத்தில் ஒரே ஒருநாள் முருகனை வழிபடுவதன் வாயிலாகப் பெற்றுவிட முடியும் என்று பழநித்தலபுராணம் கூறுகின்றது.

''கந்தனின் பூசை ஓர்நாள்
கடிநகர் இதனில் ஆற்றில்
இந்தமா ஞாலம் ஆதி
புவனங்கள் தொறும் எஞ்ஞான்றும்
வந்தனைப் புரியில் உண்டாம்
பலன் ஏய்தும் மனமொன்றிங்ஙன்
சிந்தனை புரியில் ஒரேழ்
கோடியும் சித்தி யாமால்''

என்பது தலபுராணப் பாடல் ஆகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் முதன்மை மிக்க தலம் பழநித்திருத்தலம் என்பதை

''அண்ணலம் பதிகள் தம்முள்
ஆவினன் குடியே ஏற்றம்
தண்ணரும் நதிகள் தம்முள்
சண்முக நதியே ஏற்றம்
எண்ணரும் தெய்வம் தம்முள்
முருகனே ஏற்றம் என்றே
நண்ணிஇப் பதியில் ஆடி
நவின்றருச் சிப்பர் முத்தர்''

என்று தலபுராணம் போற்றிப் பாடியிருக்கவும் காணுகின்றோம்.

திருமகளும், காமதேனுவும், சூரியனும், பூமியும், அக்கினியும் பழநி முருகனை வழிபட்டே தமக்குரிய ஆற்றலைப் பெறுவதால் திரு + ஆ + இனன் + கு + டி = திருஆவினன்குடி எனவும் பண்டுதொட்டே இத்திருத்தலத்திற்குப் பெயர் வழங்கி வரக் காணுகின்றோம்.

பழநிமுருகன் சித்தர்களும், முத்தர்களும் போற்றும் சித்தநாதனாக விளங்குவதால் இப்பழநித் திருத்தலத்திற்கு ''சித்தன் வாழ்வு'' என்பதும் ஒரு திருப்பெயராக விளங்கி வருகின்றது.

பதினெண் சித்தர்களில் போகரும், அவருடைய சீடரான புலிப்பாணியும் இப்பழநித் திருத்தலத்தில் தங்கிப் பன்னெடுங்காலம் பழநியாண்டவருக்குத் திருத்தொண்டு புரிந்துள்ளனர்.

ஞானப் பழம் காரணமாக இம் மலைக்கு வந்து முருகப் பெருமான் அமர்ந்த காரணத்தால் பழம்நீ என்ற காரணப் பெயர் இத்தலத்திற்கு அமைந்து, அப்பெயரே பழநி என மருவி இன்று வழங்கி வருகின்றது.

இப்பழநி முருகனைச் சங்கரனாரும் வணங்கி வழிபடுவதாக சங்கரதாஸ் சுவாமிகள் தாம் இயற்றியுள்ள தண்டபாணிப் பதிகத்தில் பாடியுள்ள பாடல் ஞானதண்டாயுதபாணியின் புகழினைப் போற்றும் ஒப்பற்ற பாடலாகும்.

"ஞானப்பழத்தைப் பிழிந்து ரசம் அன்பினோடு
நாம் உண்ணவும் கொடுத்த
நல்லகுரு நாதனுக்கு என்னவிதம் இக்கனியை
நாம்ஈவது என்று நாணித்

தான்அப் பனித் தலையர் தரவில்லை ஆதலால்
சாரும்ஒரு பிழையில்லையே
சக்திவடி வேலொடுந் தத்துமயில் ஏறிடும்
சண்முகா குறையும் உளதோ?
ஏன்இப்படி கோவணத்தொடும் தண்டுகொண்டு
இங்குற்றோர் ஆண்டி யானாய்
எமதுவினை பொடிபடவும் அல்லவோ வந்துநீ
இப்படி இருக்கலாம் என்ஆ
சான் அப்பன் என்ஐயன் என்னவும் எண்ணினேன்
தருவையருள் பழநிமலையில்
சந்ததம் குடிகொண்ட சங்கரன் கும்பிடும்
தண்டபாணித் தெய்வமே''

இத்தகைய ஞானதண்டபாணியை வணங்கி வழிபடும் மெய்யடியார்களுக்கு, முருகப்பெருமானின் தாயார் பார்வதியும், தந்தையார் சிவபெருமானும், சிவ பெருமானின் தோழரான குபேரனும், முருகரின் மாமனாரான திருமாலும், மாமியாரான திருமகளும், தெய்வானையை மணம் செய்து கொடுத்த மாமனான தேவேந்திரனும் ஒருங்கு அருள்புரிவதால் முருகப் பெருமானை வழிபடும் அடியவர்கள் பெறற்கரிய பேற்றினைப் பெற்றவர்கள் என்பதையும் பின்வரும் தண்டபாணிப் பதிகப் பாடலில் படித்து இன்புறலாம்.

''பொன்மயக் கிரிபெற்ற புதல்வியோ அன்னையாம்
பொருளுக்கோர் அதிபதி எனும்
புட்பக விமானத்தனைத் தோழனாய்க் கொண்ட
புங்கவனும் உன் தந்தையாம்
கன்மலை குடைகொண்டு மழைதடுத்தன்று நிரை
காத்த ஒரு கடல்வண்ணனோ
கருதுதாய் மாமனாம் பெரிய தனம் ஏந்திடும்
கமல மாதுஉன் மாமியாம்
பன்மலர் தொடைபூண்டு மூவுலகு ஆள்பவன்
பார்க்கில்ஒரு பெண்தந்தவன்
பாரில்இப் பெருஞ்செல்வம் உற்றும் நீ கோவணப்
பண்டாரமாய் வருவதேன்?
சன்மவெப்புப்பிணி அகற்றுமுயர் சஞ்சீவி
தழையவரு பழநிமலையில்
சகல உலகினரும் அடி பரவ ஒருபொருள் உதவு
திண்டபாணி தெய்வமே''

பழநிமலையை வலம்வரும் போது பழநிமலை சஞ்சீவி மூலிகைகளின் பயனால் உடற்பிணிகள் தீருவதோடு, பழநியாண்டவரை வழிபடுவதால் வினைகள்யாவும் தீர்ந்து பிறவிப்பிணியும் தீரும் என்பதை இத்தண்டபாணிப் பதிகப் பாடல் தெளிவுபடுத்துவதோடு ஈரேழு பதினான்கு உலகினரும் இப்பழநியம்பதியைப் பக்திப் பரவசத்தோடு நாளும் வந்து வழிபடுவதையும் சிறப்புறக் கூறுகின்றது.

இத்தகைய முருக குருபரனாம் ஞானதண்டாயுதபாணி எழுந்தருளியுள்ள பதிநால் உலகோர் போற்றும் பழநியாண்டவர் திருகோயிலுக்கு சுமார் 2 கோடி ரூபாய்கள் செலவில் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 5.7.2000 அன்று திருக்குட நீராட்டு விழா நடைபெற்றிருப்பது நம் வாழ்விலோர் ஒப்பற்ற வைபவம் ஆகும்.

உலகு அனைத்தும் புகழும் திருப்பழநிமலைமேவும் ஓங்கார குருநாதன் திருக்குட நீராட்டு விழாவினைக் கண்கள் பெற்ற பேரின்பப் பெரும் பயனாகக் கண்டுகளித்து இன்புற்ற, மெய்யடியார்கள் அனைவரையும் விரும்பிட போற்றி மகிழ்ந்திடுவோமாக.

பழநிமலை என்னுயிரே! பழநிமலை என்ஊனே!
பழநிமலை என்னுடலே! பழநிமலை என்பொருளே!
பழநிமலை என்னுறவே! பழநிமலை என் ஊரே!
பழநிமலை என்னுலகே! பழநிமலை பணிமனமே!

பழநியாண்டவர் தரிசிப்போம் வாரீர்! வாரீர்!!
பழநியாண்டவர் திருவருளைப் பெற்று இன்புறுவோம்
வாரீர், வாரீர்!

# பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோ[...] வாம்!
# 05-07-2000 அன்று நிறுவப்பட்டுள்ள பதினெண் [...]
# பற்றிய சிறுகுறிப்பு

பிஎச்.டி.


தெய்வநலஞ்சான்ற ஆறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாகத் திகழும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 5.7.2000 அன்று நாடு போற்ற நடைபெற்றிருப்பது நாம் பெற்றுள்ள பெறற்கரிய பேறு ஆகும்.

மனிதரும், தேவரும், மாயா முனிவரும், சித்தரும், முத்தரும் வணங்கி மகிழும் ஞான தண்டாயுத பாணிக்கு ''சித்த நாதன்'' என்ற திருப்பெயரும், அவன் மகிழ்ந்து உறையும் பழநியம்பதிக்கு ''சித்தன் வாழ்வு'' என்ற திருப்பெயரும் உண்டு. இறைவனை இடைவிடாது தியானித்துச் சித்தத்தை அடக்கி அகக் கண்களால் இறைவனைக் கண்டு ஆத்ம சக்தியால் செயற்கரிய செயல்களைச் செய்தவர்கள் சித்த புருஷர்கள். இவர்களைப் ''பதினெண் சித்தர்கள்'' என்று பைந்தமிழ் உலகம் கொண்டாடி வருகின்றது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போக சித்தரும், அவருடைய சீடர்களான புலிப்பாணி, கொங்கணர், கருவூரார், சுந்தரானந்தர், மச்சமுனி, கோரக்கர், இடைக்காடர், கமலமுனி, சட்டைமுனி ஆகியோர் மகிழ்ந்திருந்த திருத்தலமே பழநியம் பதியாகும்.

இத்தகைய சிறப்பு மிகுந்த பழநி மலையில் போக சித்தர் ஞாலம் உய்யும்பொருட்டு ஞான தண்டாயுதபாணி திருவுருவச் சிலையைச் சிறப்பாக உருவாக்கிப் பூசைகள் சிறப்புறச் செய்து வந்தார் என்பதை பழநித் திருத்தல வரலாறு நமக்கு நன்கினிது உணர்த்துகின்றது.

சித்தர்கள் திகழும் புனிதத் திருத்தலமாகிய பழநியில் அருள்மிகு ஞான தண்டாயுதபாணித் திருக்கோயிலுக்கு ஞாலம் போற்ற நடைபெறும் புண்ணியத் திருக்குட நீராட்டு விழா வைபவத்தின்போது பார் புகழும் பதினெண் சித்தர்கள் திருவுருவச் சிலைகள்



அமைக்கப்பட்டிருப்பது ஒரு மகத்தான வைபவம் ஆகும்.

இவ்வைபவத்தைக் கொண்டாடி மகிழும் இவ்வினிய வரலாற்றுச்சிறப்புமிக்க நிகழ்ச்சியில் பதினெண் சித்தர்கள் வரலாற்றினைச் சுருக்கமாக மெய்யன்பர்கள் அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் சிறு வெளியீடாக - சீரிய வெளியீடாக வெளியிடுவதில் அளவற்ற மகிழ்வினை அடை கின்றோம்.

**அகத்தியர்:**

பிரமன் செய்த யாகக் கும்பத்தில் தோன்றியவர். புலத்திய முனிவரின் சகோதரியாகிய உலோபா முத்திரையை மணந்தவர். கரக நீரால் காவிரி நதியைத் தோற்றுவித்தவர். சிவபெருமான்- உமாதேவியார்

திருமணத்தின்போது வட இமயம் தாழ்ந்து, தென் பகுதி உயர்ந்தபோது பூமியைச் சமநிலைப்படுத்த சிவபெருமானால் பொதிகைக்கு அனுப்பப்பட்டவர். ''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்று அகத்தியரைக் கம்பர் போற்றியிருப்பது குறிப் பிடத்தக்கது. அகத்தியர் இலக் கணம், அகத்தியர் சித்த வைத்தியம், அகத்தியர் ஞானம் முதலாக 96 நூல்கள் இவர் இயற்றியுள்ளதாக அறியப்படுகின்றன.

**இடைக்காடர்:**

பொதிகைமலைச் சாரலில் ஆடுமேய்த்துக் கொண்டிருந்த இவர் ஞானியர் ஒருவருக்குப் பால் கொடுத்து உபசரித்து, அவரிடம் ஞான உபதேசம் பெற்றுச் சித்தரானார்.

ஒருமுறை மழையின்றி நாடு 12 ஆண்டுகள் பஞ்சத்தில் வாடும் என்பதை முன் அறிந்து, குருவரகு என்னும் தானியத்தை சேறோடு கலக்கிச் சுவர் வைத்துக் குடிசையொன்று கட்டிக் கொண்டு அதில் வசித்தார். தம் ஆடுகளையும் எருக்கிலை தின்று உயிர் வாழு மாறு பழக்கிக் கொண்டார். பஞ்ச காலத்தில் ஆடுகள் சுவரைத் தேய்க்க, நாளும் உதிர்ந்த தானியம் உண்டு இவர் உயிர் வாழ்ந்து வரலானார்.

உயிர்கள் எல்லாம் பஞ்சத்தால் மாண்டுபட இவரும், இவர் ஆடுகளும் உயிர் பிழைத்திருக்கும் அதிசயம் காண நவகோள்களும் இவரிடத்து வந்தனர். மழை பெய்வதற்கு உகந்தவாறு நவகிரகங்களை அமர்த்தி, மழை பெய்வித்து ஞாலத்தை வாழ்வித்த மாதவர் இவர்.

**இராமதேவர் :**

''இராமதேவர் பூஜாவிதி'' என வழங்கும் இவர் அருளி யுள்ள நூல் வாயிலாக இறைவனை ஜோதியாக வழிபட வேண்டும் என்ற இவர்தம் கருத்து புலனாகின்றது. இவர் அகத்தியர், திருமூலர் காலத்தில் வாழ்ந்திருந்தவர். இவரைத் தேரையர் எனக் கூறுவதும் உண்டு.

**கமலமுனிவர்:**

இவர் போக சித்தரின் மாணவர் ஆவார். இவர் கமலமுனி 300 எனும் வைத்திய நூலையும், இரேகை சாத்திர நூலையும் அருளியுள்ளார். இவர் திருவாரூரில் வாழ்ந்திருந்த காரணம் பற்றியே திருவாரூரைக் ''கமலாலயம்'' என்று வழங்குகின்றனர்.

**கருவூரார்:**

இவர் கொங்கு நாட்டிலுள்ள கருவூரில் தோன்றியவர். போக சித்தரிடம் உபதேசம் பெற்று ஞான நூல்கள் பல ஆராய்ந்து சிவ யோகத்தில் நின்ற வர். காயகற்பம் உண்டவர். பல சித்திகள் கைவரப் பெற்றவர்.

தென்பாண்டி நாட்டுத் திருப்புடைமருதூர் இவர் சென்றிருந்தபோது தாமிரபரணி நதியில் வெள்ளம் பெருகி ஓடியதால் கரையில் நின்றவாறே ''நாறும்பூ நாதா'' என்று கூவி அழைக்க, சிவ பெருமானும் தலைசாய்த்து ''வாரும்'' என இவரை விரும்பி அழைத்துள்ளார். தஞ்சை இராச இராசேச் சுரத்தில் பெருவுடை யார்க்கு அட்டபந்தன மருந்து பலமுறை சாற்றியும் இளகாத நிலையில், போக சித்தரின் அறிவுரைப்படியே பொதிகை மலையில் இருந்து விரைந்து தஞ்சைக்கு வந்து அஷ்டபந்தன மருந்தை இறுகச் செய்து பெரியாவுடையாரை நிலைநிறுத்தி யுள்ளார்.

**குதம்பைச் சித்தர்:**

குதம்பை என்னும் காதணியை அணிந்த பெண்ணை நோக்கிக் கூறுவதாக இவர் பாடல்கள் அமைந்து விளங்குவதால் இவரைக் ''குதம்பைச் சித்தர்'' என அழைப்பர்.

''மாங்காய்ப் பாலுண்டு மலைமேல்
இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி - குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி''

என்ற இவர்தம் பாடல் நாடறிந்த ஒன்று. ஞானியர் ஞானநிலை உணர்த்தும் பாடலாகும்.

**கொங்கணவர்:**

இவர் போகரின் மாணவர். இவர் தவத்தில் இருக்கையில் கொக்கொன்று இவர் மீது எச்சமிட அதை அவர் பார்வையால் எரித்துச் சாம்பல் ஆக்கி னார்.

இவர் தவம் நீங்கித் திருவள்ளுவர் வீட்டிற்குப் பிச்சை கேட்டு வந்தபோது திருவள்ளுவரின் தேவியார் பிச்சையிட தாமதம் ஆனது. அதைக் கண்டு கொங்கண வர் கோபிக்க திருவள்ளுவரின் துணைவியார் ''கொக் கென்று நினைத்தாயோ, கொங்கணவா'' எனக் கேட்ட தாக வரலாறு உள்ளது.

இவர் பாடிய நூல்கள் கொங்கணர் கடைக் காண்டம், ஞானம் 100, குளிகை, திரிகாண்டம் ஆகியன.

**கோரக்கர்:**

இவர் மச்சமுனியின் மாணவர். பிள்ளைவரம் வேண்டிய ஒரு மலடிக்கு மச்சேந்திரர் திருநீறு வழங்கி ''மகவுண்டாகும்'' என ஆசி வழங்கினார். அம்மலடி பின் அத்திருநீற்றினைக் குப்பையில் இட்டுவிட, ஆண்டுகள் பல கழிந்து மச்சேந்திரர் ''மகவெங்கே?'' எனக் கேட்க திருநீற்றினைக் குப்பை யில் இட்டதாக அவள் கூற, மச்சமுனி ''கோரக்கா வா!'' என அழைக்க குழந்தையாய்த் தளர்நடையிட்டுத் தோன்றியவர் கோரக்கர். அல்லமர் வாளால் வெட்ட இவர் தேகம் ஊறுபடாமல் வாள் மழுங்கியது. இவர் எழுதிய நூல்களில் சில மலைவாகடம், சந்திரரேகை, கோரக்கர் வைப்பு ஆகியவைகளாகும்.

**சட்டைமுனி:**

இவர் காலம் அகத்தியர் காலம் என்பர். இவரும் போகரின் மாணக்கர் ஆவார். இவர் செய்த நூல்கள் சட்டை முனி ஞானம் 200, சட்டைமுனி ஞானம் 1200, திரிகாண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு ஆகியன ஆகும்.

''ஓதப்பா நாற்பத்துமுக் கோணம் வைத்தே
உத்தமனே பூசை செய்வார் சித்தர்தானே''

எனவரும் இவர்தம் பாடல் வரிகள், இவர் பூஜையில் மகாமேரு யந்திரத்தைப் பயன்படுத்தியதை உணர்த்து கின்றன.

**சுந்தரானந்தர்:**

இவர் போகர் மாணாக்கரில் ஒருவர். இவர் சக்தி பூசை செய்து மதுரையில் சொருபசமாதி அடைந்தவர். இவர் செய்த நூல் ''வைத்திய திரட்டு''.

**தன்வந்தரி:**

இவர் பாற்கடலில் பிறந்த தேவ வைத்தியர். இவர் அருளிச் செய்த நூல்கள் தன்வந்தரி நிகண்டு, வைத்திய சிந்தா மணி, சிமிட்டு ரத்தினச் சுருக்கம், கலைஞானம் ஆகியனவாகும்.

**திருமூலர்:**

திருக்கைலையில் நந்திதேவர் அருள்பெற்ற சித்தர். பூவுலகில் அகத்தியருடன் வசிக்க எண்ணி ஆகாய மார்க்கமாகப் பறந்து வரும் வழியில் மூலன் எனும் இடையன், தன் பசுக்களை ஓட்டிக் கொண்டு வந்து அரவம் தீண்ட மாண்டு கிடக்கக் கண்டார். பசுக்களை மகிழ்விக்க வேண்டி கூடுவிட்டு கூடு பாயும் சித்தியால் மூலன் உடலில் புகுந்து திருமூலர் ஆனார். இவர் அருளிய சாத்திரமே திருமூலர் திருமந்திரம் என் கின்ற பத்தாம் திருமுறையாகும்.

**நந்திதேவர்:**

சிவபெருமானை நோக்கி சிலாத முனிவர் யாகம் புரிந்த போது யாகம் செய்ய உழப்பட்ட நிலத் தில் உழுசாலில் பொன் பெட்டியில் சிவபெருமான் அருளால் தோன்றியவர். சகலகலை வல்லவர். சிவ பெருமான் போல் நித்தியராய் எல்லோராலும் துதிக்கப் படுபவர். திருக்கயிலையில் வீற்றிருப்பவர்.

**பதஞ்சலி:**


அத்திரி முனிவரின் தேவியாகிய அநசூயையிடம் மகவாய்த் தோன்றி, தில்லைக்கு வந்தவர். தில்லையில் முன்பே வந்து வாழ்ந்திருந்த வியாக்கிரபாதருக்கு உற்ற தோழர் ஆனவர். நடராசரின் திருநடனக் கோலம் கண்டு மகிழ்ந்து பாணினி சூத்திரத்திற்கு பாஷ்யம், யோகசூத்திரம் முதலான பல நூல்களை அருளியவர்.

**பாம்பாட்டிச் சித்தர்:**

இவர் பாம்புகளைப் பிடித்து ஆட்டியும், தம் சொற்படி நடக்கச் செய்தும் வந்ததால் ''பாம்பாட்டிச் சித்தர்'' என அழைக்கப்படுகிறார். சட்டை முனிவ ரிடம் தீட்சை இவர் பெற்றதாக வரலாறு உள்ளது. உருண்டோடி வந்த குன்றினைத் தம் பார்வையால் நிற்கச் செய்தும், கூடுவிட்டு கூடுபாய்ந்தும் பல சித்துக்கள் புரிந்துள்ளார். ''சித்தாரூடம்'' மற்றும் பல வைத்திய நூல்களை அருளியுள்ள இவர், மருதமலை அடிவாரத்தில் தவம் செய்திருந்ததாகவும் கூறுவர்.

**புலிப்பாணிச் சித்தர்:**

கன்னட நாட்டிலிருந்து வந்து போகசித்தரின் சீடர் ஆனவர். இவருடைய இயற்பெயர் சிவலிங்க தேவ உடையார் என்பதாகும். சண்முகநதிக்குத் திரு மஞ்சனத்திற்கு நீர் கொண்டு வரச் சென்றபோது குடம் உடைந்து போனதால், ஜலத்தைத் திரட்டிப் புலியை



வரவழைத்துப் புலியின் பேரில் ஏறிக் கொண்டு வந்து பழநியாண்டவருக்கு அபிசேகம் செய்து வந்தபடியால் போகநாதரால் ''புலிப்பாணி'' என அழைக்கப் பெற்ற வர். இவர் அருளியுள்ள வைத்திய நூல்கள் அநேகம் உள்ளன.

**போகர்:**

ஏழு கடல்களைத் தாண்டியும், மேருவிற்கு அப்பால் சென்றும் வல்லமை பெற்று பழநி மூலவரை உருவாக்கியவர். சிங்கத்திற்கும், புலிக்கும், பூனைக்கும் ஞானோபதேசம் புரிந்தவர். இவர் செய்த நூல்கள் போகர் 7000, நிகண்டு 17000 சூத்திரம், 700 யோகம் ஆகியன. இவர் பழநியாண்டவரால் சித்தி பெற்றவர்.

**மச்சமுனி:**

சிவபெருமான் கடற்கரையில் பார்வதிக்கு தாரகமந்திரம் உபதேசிக்கையில், மீன் ஒன்றின் வயிற்றிலிருந்து அம்மந்திரம் கேட்டுத் தோன்றியபடியால் சிவபெருமானால் ''மச்சமுனி'' என்று அழைக்கப் பெற்றவர். கோரக்க சித்தரின் குரு. மச்சமுனியும் கோரக்கரும் ஆற்றிய அற்புதங்கள் மிகப் பலவாக உள்ளன.

சித்தர்கள் வாழி! சிவன் வாழி! முனி
தேவர்கள் வாழி! ரிஷி வாழி!
பத்தர்கள் வாழி! பதம் வாழி! குரு
பார்புகழ் தண்டபாணி வாழிய வாழியவே.

★★★

# மாமயிலை வெள்ளீசுவரர் மலரடி போற்றுவோம்!

– டாக்டர் வ. ஹேமா, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி


திருக்கயிலையில் ஒரு வில்வமரத்தின் கிளையின் மீதிருந்த குரங்கொன்று வில்வ இலைகளைப் பறித்து இடைவிடாது கீழே போட்டுக்கொண்டிருந்தது. அத்தழைகள் அம்மரத்தின் கீழ் அமர்ந்திருந்த பரமசிவன், பார்வதி மீது விழுந்தது. இறைவர், தமது பெருங்கருணையினால் அக்குரங்கு வில்வத் தழை கொண்டு, தங்களை அர்ச்சித்ததாகக் கருதினார். அடுத்த பிறவியில் அக்குரங்கு முசுகுந்த சக்கரவர்த்தியாகப் பிறப்பதற்கு அருள் செய்தார்.

ஈசனின் கருணையை வெளிப்படுத்தும் மற்றொரு நிகழ்ச்சி!

திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தில், சிவாலயத்தில் ஒரு விளக்கு அணையும் தறுவாயிலிருந்தது. அப்போது அங்கு நுழைந்த எலியொன்று அவ்விளக்கிலிருந்த எண்ணையைப் பருக வந்தது. எலியின் மூக்கு, திரியில் பட்டவுடன் அந்த விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது! இந்த எலி, தமது திருக்கோயில் விளக்கைத் தூண்டி எரியச் செய்ததாகக் கருதிய சிவபெருமான் எலியை, அடுத்த பிறவியில், பூமியில் புகழ் பெற்று விளங்கிய மகாபலி மன்னனாகப் பிறக்கச் செய்தார்!

மன்னன் மகாபலி செய்த வேள்வியில் தானம் பெற வந்தார் வாமனர். மூவடி மண் கேட்டுப் பெற்றார். அந்த தானத்தை எப்படியும் தடுக்கவேண்டுமென எண்ணினார் சுக்கிராச்சாரியார். மகாபலி, தாரை வார்த்து, தானம் கொடுத்தபொழுது, வண்டின் உருவெடுத்து கெண்டியின் வாயை அடைத்தார். திருமால் கெண்டியின் வாயை தருப்பையால் குத்தி வண்டைக் கீழே தள்ளினார். அப்போது வண்டுருவில் இருந்த சுக்கிராச்சாரியாரின் கண்பார்வை போயிற்று. தருப்பை புல்லால் திருமால் குத்திப் போக்கிய தமது கண்ணொளியை மீண்டும் பெற, சுக்கிராச்சாரியார் சிவனை நோக்கித் தவம் செய்ய விரும்பினார்.

மயிலாப்பூரில் குருந்த மரத்தின் கீழ் சிவலிங்கத்தை வைத்துப் பூஜித்துக் கடுந்தவம் இயற்றினார். சிவபெருமான் பிரும்மா, விஷ்ணுவுடன் எழுந்தருளி, அசுரகுருவுக்குக் காட்சி கொடுத்தார். கண்ணொளியும் வழங்கினார்.




வெள்ளி (சுக்கிரன்) வழிபட்ட அத்திருத்தலமே அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில்!

மயிலையில் தெற்கு மாடவீதியில் தெற்குப் பார்த்த நுழைவாயிலுடன் அமைந்துள்ள வெள்ளீசுவரர் திருக்கோயில். இத்திருக்கோயிலினுள் நுழைந்தவுடன் நமக்குக் காட்சி அளிப்பவர் சித்தி புத்தியுடன் விளங்கும் செல்வ விநாயகர்தான் தமிழகத்தில் பிரம்மச்சாரியாக இருக்கும் கணபதி; வட மாநிலங்களில் சித்தி, புத்தி என்ற இரு தேவியருடன் காட்சி தருவார். அவ்விரு தேவியர் புடை சூழ விநாயகர் எழுந்தருளியிருப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பு. இவ்விநாயகர் முன்பு மற்றுமொரு தனி விநாயகரும் எழுந்தருளியுள்ளார்.

கிழக்குப் பார்த்த சந்நிதியில் வெள்ளீசுவரர் மூலவர் லிங்கத்திருவுருவில் விளங்குகிறார். அம்பிகை பெயர் காமாட்சி ஆகும். கா - கலைமகள், மா - திருமகள் காமாட்சி என்றால் கலைமகளையும், திருமகளையும் தமது கண்களாக உடையவள் என்று பொருள்.

காமாட்சி சந்நிதியின் வலப்புறமுள்ள அர்த்த ஜாமப் பள்ளியறை கண்ணாடி மாளிகையாக மாற்றப் பட்டுள்ளது. இங்கு, அம்பிகையுடன் பள்ளிகொள்ளும் வெள்ளீசுவரர் ஆயிரக்கணக்கில் பிரதிபலித்து எண்ணற்ற பிரதிபலிப்பு வடிவங்களை வழங்குவது ஓர் அரிய காட்சியாகும்.

இத்திருக்கோயிலில் முருகப்பெருமான், முத்துக் குமாரசுவாமி என்ற பெயருடன் விளங்குகிறார். இச்



அருள்மிகு வெள்ளீசுவரரை சுக்கிர பகவான் வழிபடும் திருக்காட்சி

சந்நிதி முகப்பில், ''கந்தவேளை எந்தவேளையும் நினை'' என்ற வாசகத்துடன் அலங்கார மின்விளக்கு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

உட்சுற்றுப் பிரகாரத்தில், சூரியன், வீரபத்திரர், அண்ணாமலையார், உண்ணாமுலை அம்பிகை, நால்வர், சேக்கிழார், காசி விஸ்வநாதர், நடராஜர், உற்சவமூர்த்தங்கள் பைரவர் ஆகியோர் ஆங்காங்கே எழுந்தருளியுள்ளனர். பள்ளியறையின் இடப்புறத்தில் சோமஸ்கந்த மூர்த்தி அமர்ந்திருக்கிறார்.

சுவாமி சந்நிதியின் தெற்குப் பக்கத்தில் தட்சிணாமூர்த்தியும், வடக்குப் பக்கத்தில் துர்க்கையும் உள்ளனர். வெளிச் சுற்றின் வடகிழக்கு மூலையில் சனிபகவான் சந்நிதியும், நவக்கிரக சந்நிதியும் அமைந்துள்ளன.

சனிபகவானுக்கு நேர் எதிரே சுக்கிரன் குருந்த மரத்தினடியில் சிவபெருமானை வழிபட்டு நிற்கிறார். இவரை வழிபட்டு, கண்ணொளியை மீண்டும் பெற்றவர்கள் பலர். இடையேயுள்ள தூணில் ஆஞ்சநேயரும் காட்சி தருகிறார்.

இத்திருக்கோயிலின் ஆண்டுப் பெருவிழா வைகாசி மாதத்தில் நடைபெறுகிறது. திருமாலும், சிவபெருமானும் எதிர்கொண்டு காட்சியளிக்கும் 'சந்திப்பு உற்சவம்' பொன்னேரியில் நடைபெறுகிறது. அதேபோல், அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில் வைகாசிப் பெருவிழாவில் எட்டாம் நாளன்று, வெள்ளீசுவரர் சுக்கிரனுக்குக் கண்ணொளி வழங்கும் விழா நாளன்று மாலை, இறைவன், பிரும்மா, விஷ்ணுவுடன் மும்மூர்த்திகளாக அற்புதக் கோலத்துடன் உலா வருவார். விடையாற்றிக் கலைவிழாவும் கொண்டாடப்படுகிறது.

பிரதோஷம் முதலான சிவாலயத் திருவிழாக்கள் அனைத்தும் இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. பிரதோஷ ரிஷபவாகனம் வெள்ளித் தகடு பொருத்தப்பட்டுப் புதுப் பொலிவுடன் விளங்குகிறது. மாதம் இருமுறை வரும் பிரதோஷ விழாவுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தற்போது பெரிதும் பெருகியுள்ளது.

நவராத்திரி, ஸ்கந்தசஷ்டி, திருவாதிரை, பன்னிரு திருமுறை விழா, பாவை விழா போன்ற விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாக்களில் அறிஞர்கள் பங்கேற்கும் இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

இத்திருக் கோயிலுக்கு இராஜகோபுரம் இல்லாமல் இருந்தநிலை மயிலை மக்களின் மனக்குறையாக இருந்தது. தற்போது ஐந்து நிலை கொண்ட அழகிய இராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் அருகிலுள்ள மக்கள் நாள்தோறும் அபிஷேகத்திற்காக அளிக்கும் பாலை, ஆலயத்தைச் சேர்ந்த தொண்டர்கள் காவடியில் எடுத்து வந்து ஆலயத்தில் சேர்த்து வருவது தனிச் சிறப்பு.

இக்கோயில் இராஜகோபுரத்திற்கும், பழுது பார்க்கப்பட்ட மற்றச் சந்நிதிகளுக்கும் 'மகா கும்பாபிஷேகம்' ஆனிமாதத்தில் நடைபெறவுள்ளது. பக்தர்கள் கலந்துகொண்டு இறையருள் பெறுவார்களாக!

# அருள்மிகு வாழைத் தோட்டத்து ஐயன் கோவில்

– பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியம், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.

**இருப்பிடம்**

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் வட்டம் அய்யன்பாளையத்தில் உள்ள புண்ணியத் தலம் ஆகும். புகைவண்டியில் வந்தால் ஈரோடு - போத்தனூர் வழித்தடத்தில் இருக்கும் சோமனூர் அல்லது திருப்பூர் புகைவண்டி நிலையத்தில் இறங்க வேண்டும். திருப்பூரிலிருந்து புறப்பட்டு, ஆலயத்தின் வழியாக சோமனூர் செல்லும் டவுன் பஸ்கள் உண்டு. எண். 5, 5 A நகரப் பேருந்துகளில் சென்றால் இவ்வாலயத்தின் அருகில் இறங்கலாம்.

கோவிலின் நேர்கிழக்கே சுமார் 20 கி.மீட்டர் தூரத்தில் திருப்பூர் உள்ளது. கோயிலுக்குத் தெற்கே 15 கி.மீட்டர் தூரத்தில் பல்லடம் உள்ளது. கோயிலுக்கு வடக்கே 25 கி.மீட்டர் தூரத்தில் அன்னூர் உள்ளது. கோயம்புத்தூரிலிருந்து அய்யன் கோவிலுக்கு நேரடியாகப் பேருந்து வசதிகள் உள்ளன.

**கோவில் தேரன்றிய வரலாறு**

கொங்கு மண்டலத்தில் அவிநாசி என்னும் சிவத்தலத்தின் கீழ்த்திசையில் இருப்பது மோர்ப் பாளையம் என்னும் சிற்றூர். இக்கிராமத்தில் தலை சிறந்த பெருங்குடிப்பிரபுவாக விளங்கியவர் சின்னைய கவுண்டர். இவருக்கு நெடுநாளாக மகப்பேறு வாய்க்காமல், பின் தோன்றிய பிள்ளை ஐந்து வயதை அடைந்தது. சின்னைய கவுண்டர் விண்ணுலகடைந்தார். கணவனை இழந்த கைம்பெண் சின்னைய கவுண்டரின் மனைவி தன்னுடைய ஊரில் இருப்பதற்கு மனமின்றி தனது ஒரே புதல்வன் ''செங்காளியப்பனை'' அழைத்துக்கொண்டு தனது நெருங்கிய உறவினரான அய்யன் பாளையம் திரு பச்சையண்ண கவுண்டர் இல்லம் அடைந்து, தன்னையும், தன் பிள்ளைகளையும் ஆதரிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். பரோபகாரியான பச்சையண்ண கவுண்டர் இவ்விருவரையும் தன் பண்ணையில் வேலை பார்த்து வரும்படி உத்தரவு கொடுத்தார். தாயும் பிள்ளையும் பண்ணையில் கண்ணுங் கருத்துமாய் ஊழியம் செய்து வந்தார்கள். அவர்களின் கள்ளங்கபடமற்ற உழைப்பையும், மனதையும் கவனித்து உணர்ந்த பச்சையண்ண கவுண்டர், அவர்களிடம் உண்மை அன்பு கொண்டு, தனது பெண்ணைச் செங்காளியப்பனுக்குக் கொடுத்துத் தனது மருமகனாக்கிக் கொண்டார். செங்காளியப்பனுக்கும், பச்சையண்ணக் கவுண்டரின் பிரிய புதல்வியின் மூலம் பிறந்த எட்டுப் பெண்களுக்குப் பிற்கு ஒன்பதாவது ஆண்பிள்ளை யாகத் தோன்றியவரே ''சின்னையன்'' ஆவார்.

***1699 விளம்பி வருஷம் மார்கழி மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை விசாக நட்சத்திரத்தன்று தோன்றினார் சின்னையன்.***

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்பத் தோன்றியவர் சின்னையன்.

சின்னையன் இளமைக்காலத்திலேயே கல்வி, ஒழுக்கங்களில் சிறந்துவிளங்கினார். 12 வயதான சின்னையனை மாடுமேய்க்கும் பணி செய்யக் கட்டளையிட்டார் தந்தை.

மாடுமேய்க்கும் நிலத்திற்கு அருகில் இருந்த நீர்நிலையில் மூழ்கிப்பின், அங்கு மலர்ந்திருந்த மலர்களைப் பறித்து வந்து சிறு மேடை அமைத்து, அதன்மீது சில கற்களைப் பொறுக்கி வரிசையாக அடுக்கி, சிவலிங்கமாகக் கருதி, நீராட்டி, மலர் சூட்டி, பழங்கள் நிவேதித்துப் புகழ்ந்து பாடி வணங்கி வந்தான் சின்னையன்.

**அற்புதம்**

ஓர்இரவு சின்னையன் அயர்ந்து தூங்கும் போது அவனது கனவில், அழகிய புருடன் தோன்றி, தனக்கு அகிலாண்ட பரிபூரண நிலையைப் பற்றி உபதேசித்ததைக் கண்டு அதிசயித்து விழித்தான். பின் காலையில் மாடு கன்றுகளை மேய்த்துச் செல்லும்போது, வழக்கம் போல் மேடையமைத்து கற்களை அடுக்கி மலர்களால் அர்ச்சித்து வணங்கினான். தன்னை மறந்தான். தியான நிலையில் இருந்த அவனுக்கு விழிப்பு தோன்ற, மேடையை நோக்கினான். மேடைமீது தண்டு,



கமண்டலங்களை ஏந்திய கரமும், பொன்னொளி திகழும் மேனியும் நீண்ட சடைமுடியும், அருள் ஒழுகும் முகமும் கொண்ட சித்த மூர்த்தி ஒருவர் வீற்றிருக்கக் கண்டான் சின்னையன். அம் மூர்த்தியின் திருவடி களில் வீழ்ந்து, பணிந்து, வாய் பொத்தி நின்றான். அச்சமயம் மேடையில் ஊர்ந்து செல்லும் நச்சுப் பாம்பைக்காட்டி அசையாமல் அதை அங்கேயே நிற்கும் படி நாம் ஆணையிட்டதாகக் கூறு என்றார். சின்னைய னும் அவ்வாறே உத்தரவிட, பாம்பும் அசையாமல் நின்றது. சிறிது நேரம் கழித்து சித்தர் சின்னையனை அழைத்து, அப்பாம்பை இவ்விடத்தை விட்டுப் போகச் சொல் என்று கூறவே சின்னையன் அவ்வாறே உத்தர விட பாம்பும் மறைந்தது.

இத்தகைய அதிசயக் காட்சி ஒன்றைக் கண்ட சின்னையன் மறுபடியும் அம்மகான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று அருட் பெருங்குருவே! நச்சுப்பையை உடைய நாகப் பாம்புகளாலும், விஷம் உடைய இதர பிராணிகளாலும் துன்புறும் உலக மக் களை அத்துன்பத்தினின்று மீட்கும் வழியைப் போதித்து அருள வேண்டும் என்று வேண்டினான். அம்மகான், ''சர்வ சம்மார மந்திரத்தை'' அவனுக்கு உபதேசித்து, பக்தி யோகத்தின் பெருமையை விளக்கிக் காட்டி, அவன் செவியில் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து அருளினார். பின் அம்மகா புருடர் சின்னையன் வேண்டு கோளுக்கிணங்கி அவன் வீட்டிற்கு எழுந்தருளினார்.

அம்மகான் தனி விடுதியில் தங்கினார். உணவு தயாராக்கச் சொல்லிவிட்டு சின்னையன் அம்மகானைத் தரிசிக்கச் சென்றான். அங்கு அவன் கண்ட காட்சி மெய் சிலிர்க்கச் செய்தது. பல ஞானாசிரியர்கள் ஒருவருக் கொருவர் பேசுவதைப் போலக் கண்டான். ஆனால் திடீரென்று அக்காட்சி மறைந்து, கயிலை மலையும், நந்திதேவரும், முனிவர் கூட்டமும், பூத கணங்களும் புடைசூழ முக்கண் மூர்த்தி பார்வதி தேவியுடன் வீற்றிருக்கும் அற்புதக் காட்சியைக் கண்டு பரவச முற்று, மெய் மறந்திருந்தான் சின்னையன்.

சுமார் இரண்டு மணி நேரம் கழிந்தபின் உணர்ச்சி பெற்று, விழித்துப்பார்த்தான். சகல தோற்றங் களும் மறைந்து விட்டன. ஞானாசிரியரும் மறைந்து விட்டார். ஞானாசிரியரைத் தேடி ஊண் உறக்க மின்றி வருந்திக் கொண்டிருந்தான் சின்னையன். ஊரார் பலவிதமாய்ப் பேசினர். பெற்றோர்கள் மனம் வருந்தினர்.

சின்னையன் சிவபூசையை மறவாமல் நடத்தி வந்தான். 15 வயது நடந்து கொண்டிருந்தது. குருநாத ரைத் தேடியலைந்தான். ஒருநாள் ஞானாசிரியரைக் கண்டு திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆசிவேண்டி னான் சின்னையன்.

''குழந்தாய்! என்னிடத்தில் இவ்வாறு பந்தம் வைக்காதே: பந்தமுடையவர் மோட்சத்திற்குத் தகுதியாக மாட்டார்கள்'' என்றார்.

''நாம் அன்றிரவு உன்னுடைய வீட்டில் நிகழ்த்திய சித்திகளை வெறும் விளையாட்டுக்காக காட்டினோம் இல்லை. சித்துக்களைச் செய்வதனா லேயே ஆன்மாக்கள் கடவுள் தன்மையை அடைய முடியாது. இல்லறத்தில் இருந்து கொண்டு உன்னால் இயன்றவரை, உலக உயிர்களுக்கு உதவி, உன் னுடைய 72-ம் வயதில் வீடுபெறுக'' என்று கட்டளையிட்டருளினார்.

சின்னையன் மனம் மகிழ்ந்து, ஆணைப்படி நடப்பதாகக் கூறி, ஞானாசிரியரிடம் விடைபெற்றுத் திரும்பினான். அதுமுதல் ஞானாசிரியரின் ஆணைப் படி, திருவருளைத் துணையாகக் கொண்டு, இல் லறத்தை நல்லறமாக நடத்திப் புதல்வர்களைப் பெற்று, தன்னை நாடிவந்த மெய்யன்பர்களின் தீராப் பிணிகளைப் போக்கி வந்தார். சின்னையனின் தெய்வ பக்தி, இரக்கம், சாந்தம், பொறுமை, சற்குணம் ஆகிய அரும்பெரும் குணங்களை நன்கறிந்த ஊராரும், பிற ரும் சின்னையனிடம் அன்பும், நன்மதிப்பும், நம்பிக்கை யும், பயபக்தியும் கொண்டு போற்றினர்.

சின்னையன் வெள்ளைநிறக் காளைமாடு ஒன்றை அன்போடு வளர்த்து வந்தார். ஒருநாள் இரவு ஞானாசிரியர் சின்னையன் கனவில் தோன்றி,

''அன்பனே, உனக்கு வயது 72. நாளை பிற்பகல் ஆயுள் முடியப்போகிறது. உமாபரமேஸ்வரர் வந்து, உன் மெய்யன்புக்கு மகிழ்ந்து, நந்தி தேவர் மூலமாக உன்னைத் தம்மிடத்திற்கு அழைத்துக் கொள்வார்'' என்று கூறி மறைந்தார்.

மறுநாள் பேரூர் மேலைச்சிதம்பரம் திருவாதிரை விழா. தம்மக்கள் சின்னையனைப் பேரூர் இறைவனை வழிபட அழைத்தனர். ஆனால் சின்னையனோ, ''நாம் நாளை கயிலை நாதரைச் சென்று தரிசிக்கிறோம். நீங்கள் இன்று பேரூர் சென்று வாருங்கள்'' என்று விடை கொடுத்து அனுப்பினார்.

அவர்கள் சென்றபின், சின்னையன் தோட்டத்திற்குச் சென்றார். ஒரு மூலையிலிருந்து காளை தன்னை நோக்கி வருவதைக் கண்டுநின்றார். அப்பொழுது தமக்கு எதிரில் ஆகாயத்திலிருந்து புதியதொரு ஒளி தோன்றியதைக்கண்டு அதிசயித்து நின்றார். திருக் கயிலையில் அண்ணல் சிவபெருமான் திருவடியைக் கண்டு, திருநந்தி தேவருடைய திருக்காட்சி கண்டு, அதை ரசித்துக் கொண்டிருந்தார். அத்தருணம் தன் வெள்ளைக் காளை தன் கூரிய கொம்புகளால் சின்னையன் அடிவயிற்றில் ஊடுருவும்படி செலுத்தி மேலே வாரித் தூக்கி, உயரத்தில் நிறுத்தி உதைத்தருளியது. சின்னையன் தமது பூத உடம்பினின்றும் நீங்கப் பெற்று நந்தி தேவருடன் திருக்கயிலை சென்று இறைவன் திருவடி நிழலை அடைந்து மாறாத பேரின்ப வாழ்வைப் பெற்றார்.

சின்னையன் திருக்கயிலை சென்ற காலம் சௌமிய ஆண்டு மார்கழிமாதம் 15-ம் நாள் வெள்ளிக் கிழமை திருவாதிரை நட்சத்திரம் மாலை நேரமாகும்.

### கோவில் அமைத்தது

கொங்குநாட்டின் புகழ்பெருக, குவலயம் போற்ற, கயிலை அடைந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் சின்னையன் தன் தோட்டத்துப் பண்ணையாள் கனவில் தோன்றி அறிவித்த செய்தி:

''அன்பனே! சாமளாபுரத்திற்கு வடக்கில் கிழக்கு மேற்காக ஓடிக்கொண்டிருக்கும் நொய்யலாற்றின்கரையில் தர்ப்பைப் புதர் ஒன்று இருக்கிறது. அப்புதருக்கு ஒருபுறம் கீழ்ப் புறத்தில் மறைந்துள்ள சுயம்பு லிங்கம் ஒன்றும், அவ்வாற்றின் தென் கரையில் பெரியதொரு நந்தியம்பெருமான் கற்சிலை ஒன்றும் இருக்கின்றன. இவற்றை நீ ராசியண்ணனிடம் அறிவித்து அந்த லிங்கத்தையும், நந்தியையும் நமது வாழைத் தோட்டத்தில், கிணற்றிற்குத் தென்மேற்கில் செழுமையாக வளர்ந்திருக்கும் கிளுவை மரத்தின் அடித்தளத்தில் பிரதிட்டை செய்து நியமம் தவறாமல் நாள்தோறும் காலை மாலையில் பூசித்துவரும்படி நாம் கட்டளையிட்டதாகச் சொல், அவ்வாறு செய்தால் அவ்விடத்தில் அருளும், அற்புதமும், மகிமையும், தெய்வத்தன்மையும் சிறந்து விளங்கும். பல்லாயிரம் மக்கள் பயன் பெறுவர். வேண்டுதலும் நிறைவேறும்'' என்றார்.

இவ்விவரங்கள் அனைத்தையும் அப்பண்ணையாள் விடிந்ததும், விரைந்தோடி, தம் எஜமானர் இராசியண்ணனிடத்தில் விளக்கிக் கூறினார். அவற்றை அதிசயத்துடன் கேட்டு மகிழ்ந்த இராசியண்ணன் அக்கணமே தன் சகோதரர்கள், உற்றார், ஊரார்களுடன் சென்று, சிவலிங்கத்தை எடுத்துவந்து, பிரதிட்டை செய்தார். கிளுவை மரத்தின் கீழ் சுயம்புலிங்கத்திற்கு வலது பக்கம் விநாயகரைப் பிரதிட்டை செய்தனர். அன்றுமுதல் இவ்வாலயம் ''வாழைத் தோட்டத்து அய்யன் கோயில்'' என்று வழங்கப் பெற்றது. கோவில் தோன்றி சுமார் 150 ஆண்டுகள் ஆகின்றன.

### புற்று வளர்ந்ததும் புற்றுமண் மருந்தானதும்

அய்யன் ஆலயத்தில் சிவலிங்கம் எழுந்தருளப் பெற்ற சில வாரங்களுக்குப் பிறகு கிளுவை மரத்தின் தென்புறத்தில் மண்புற்று ஒன்று வளர்ந்து, அது விஷ நோய்களுக்குச் சஞ்சீவியாய் (மருந்து) விளங்குகிறது.

ஒருநாள் ஆலயத்திற்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனுக்குப் பாம்புக்கடிபோல் உடம்பு முழுவதும் தழும்பு ஏற்பட்டு துன்பம்பட்டான். இவ்வாலயத்தில் வளர்ந்துவந்த புற்றுமண்ணில் கொஞ்சம் எடுத்து நீரில் குழைத்து உடம்பில் பூசினர். நோய் நீங்கியது. அன்று முதல் எல்லோருக்கும் அப்புற்று மண் நன்மருந்தாக விஷக்கடிகளுக்கும் அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மாமிசம் புசித்துவிட்டு இவ்வாலயத்திற்குள் சென்றால் பாம்புகள் துரத்துவதாகவும் கூறுவர். தீட்டு உடையோர் திருவிளக்கு ஏற்றத் துணிந்தால் நாகம் துரத்தும் என்பர். சுவாமி மூலத்தானத்தில் வெள்ளை நாகம் ஒன்று தல விருட்சத்தின் கீழ் விளையாடிக் கொண்டிருப்பதைப் பக்தர்கள் சிலர் பார்த்துள்ளனர்.

விஷக்கடி மற்றும் பல வியாதிகளினால் பீடிக்கப்பட்டவர்கள் கோவில் சத்திரங்களில் தங்கிப் பிரார்த்தனை புரிய மகான் அய்யன் நேரில் தோன்றி தீர்த்தம் வழங்குவதும், புற்று மண் பூசி வியாதியைப் போக்குவதும் இன்றைக்கும் பிரத்தியட்சம். சுவாமி தீர்த்தம் நல்லெண்ணையாகமாறியது. புற்றுமண் சர்க்கரை

யாக மாறியது. இதுபோன்ற பற்பல அற்புதங்கள் இவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்றன.

### கர்ப்பக்கிரகம்

புது மண்டபத்தின் வழி நுழைந்து சென்றால் நேர் எதிரில் இருப்பது அய்யன் சந்நிதானம். கர்ப்பக் கிரகம் கருங்கல் கட்டிடம். மேற்கூரை வெட்டிவேர் வேயப்பட்ட பந்தலாக அமைக்கப்பட்டுள்ளது.

மூலஸ்தானத்தின் நடுவில் சிறந்து விளங்கும் கிளுவை மரத்தின்கீழ் சிவபெருமான் நந்திதேவருடன் எழுந்தருளியுள்ளார். நெய்தீபம் மட்டும் வைக்கப்பட் டுள்ளது. கிளுவை மரத்திற்குக் கீழே சிறிது தென்புற மாக நான்கு அடி ஆழமுள்ள மண் புற்று வளர்ந்துள் ளது. அர்த்த மண்டபத்தைச் சுற்றி கருங்கல் தளவரிசை போடப்பட்டுள்ளது. பிரகாரத்தில் அரசமரத்து மேடை யில் பிள்ளையார் உருவங்களும், நாகர்சிலைகளும் அமைந்துள்ளன.

வடபுறத்துப் பிரகாரத்தில் திருமதிலை ஒட்டி தீர்த்தக்கிணறு அமைந்துள்ளது.

### பக்தர்களுக்கு வசதிகள்

ஆலயத்தின் வடக்குப் பக்கம் சுமார் ரூபாய் பத்து இலட்சம் செலவில் திருமண மண்டபம் ஒன்று கட்டப் பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

### பொங்கற் சாவடி

புதுச் சத்திரத்திற்கு மேற்புறம் மிகவும் வசதி யாக, பக்தர்கள் பொங்கல் வைக்கத் தகுதியான சாவடி ஒன்று அமைந்துள்ளது. இச்சாவடி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 128 அடுப்புகள் அமைந்திருக்கின்றன.

### விடுதிகள்

ஆறு அறைகள் கொண்ட விடுதி புதிய சாவடிக் கும், மாட்டுக் கொட்கைக்கும் இடையில் உள்ளது. இதுதவிர மூன்று பெரிய அறைகள் மெய்யன்பர்கள் குடும்பத்துடன் தங்கும் அளவில் கட்டப்பெற்றுள்ளது. இந்த அறைகள் எல்லாம் தேவஸ்தானத்தாரால் நாள் வாடகைக்கு விடப்படுகிறது.

### பூஜைகள் விழாக்கள்

இத்திருக்கோவிலில் தினமும் காலை, நடுப் பகல், மாலை, இரவு என்று நான்கு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் மார்கழிமாதம் திருவாதிரை உற்சவம் மற்றும் அய்யன் குருபூசை விழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருவிழா நேரத்தில் சமயச்சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சி கள் நடைபெறுகின்றன.

### சமுதாயப்பணிகள்

ஏழை எளிய மாணவர்களுக்காக அன்பு இல்லம் நடத்தப்பட்டு வருகின்றது. சாமளா புரத்தில் அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோவில் மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது.

இத்திருக்கோவில் தமிழக இந்துசமய அற நிலைய ஆட்சித் துறையினரால் நிர்வகிக்கப்படுகிறது. முதல் நிலை நிர்வாக அதிகாரி ஒருவர் அரசால் நிய மிக்கப்பெற்றுள்ளார். அறங்காவலர்களும் அரசாங்கத் தால் நியமிக்கப்பெற்று சிறப்பாக நிர்வாகம் நடை பெற்று வருகிறது.

---

## வாசகர் எண்ணங்கள்

ஆணையாளர் அவர்களுடைய ஆண்டாள் அருளிய ''உள்ளே உருகி நைவேனை'' என்ற ''நாச்சியார் திருமொழிப்'' பாசுரத்திற்கு ஆற்றிய ஆய் வுரையை மேமாத இதழில் காணும் வாய்ப்பினைப் பெற்றேன். பெரும் பாக்கியத்தைப் பெற்றேன் என்றே கூறவேண்டும்.

- டாக்டர் வித்துவான், வி.எஸ். செல்லம்
நாராயண ராஜா, எம்.ஏ., பிஎச்.டி.,
திருவையாறு

திருக்கோயில் இதழில் வெளிவரும் ஆணை யாளர் திருமிக ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்களின் கவிதைகள் அருமையாக உள்ளன. ஆன்மீகம் என்பது புறக்கணிக்கப்படவேண்டிய பழங்கதை அல்ல; எல்லோரும் அறிந்து அனுபவிக்க வேண்டிய புதுக்கவிதை என்பதை அவர்தம் கவிதைகள் நமக்கு நன்கு தெளிவு படுத்துகின்றன.

- சே.ப. ஸ்ரீதர்,
பெங்களூர் - 560 010.

திருக்கோயில் திங்கள் இதழ் இரண்டு திங்கள் நான் பயிலாததனால் என்மதியில் ஆன்மீக ஒளி மங்கி யது. இன்று திருக்கோயில் இதழ் படிக்கத் தொடங்கிய போது என் ஆன்மீக ஒளி புத்துணர்ச்சி கொண்டது. இனி என்றென்றும் திருக்கோயில் இதழ் வாயிலாக ஆன்மீக ஒளி பரவி மிளிரட்டும் என்று வாழ்த்துகிறேன்; வணங்குகிறேன்.

செ. கிருஷ்ணமூர்த்தி
காரமடை, கோவை - 641 104.

# இமாலயச் செலவு

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

(முன் தொடர்ச்சி)

ஒரு சமயம் அன்றைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்த ஜோதியைக் கண்டு வியப்படைந்து, தக்க பூமி சாஸ்திர வல்லுநர்களைக் கொண்டு ஆராயச் சொன்னதாகவும், இதனடிப்படையில் பல வருட காலமாக ஆராய்ச்சி செய்தும் அவ்வாராய்ச்சி பயனற்றுபோனது என்றும் கூறுகிறார்கள். இந்தப் பிரகாசமான ஜோதியைப்பற்றி காரணம் கூற முடியாததால், ஆராய்ச்சியை மேலும் தொடரவில்லை என்பதாகக் கேட்டறிந்தோம். ஏதோ ஒரு சக்தி ஒரு இடத்தில் வெந்நீர் ஊற்று ஆகவும், ஜுவாலாமுகியில் பிரகாசமான ஜோதியுடனும் விளங்குவது விஞ்ஞானத்திற்கே விட்ட அறைகூவலாகும் எனலாம்.

முதலில் மாடுமேய்க்கும் ஒருவன், பூமி சந்த்ரா எனும் அரசனிடம் தான் பிரகாசமான ஜோதியை இம்மலையில் கண்டதாகவும், சதாகாலம் பிரகாசத்துடன் விளங்குவதாகவும் சொன்னதின் பேரில், அரசன் அங்கு நேரில் சென்றுபார்த்து, அந்த மலைக்காட்டு பகுதியில் சிறு ஆலயம் நிறுவினான். பிற்காலத்தில் பாண்டவர்களால் அவ்வாலயம் புனரமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து பாரதத்தில்,

''பஞ்ச பாண்டவ தேரா பவான் பனாயா
அர்ஜுன் நி சன்வார் துலாயா''

எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் அங்குள்ள ஆங்கிலம் தெரிந்த ஆன்றோர்களை அணுகிக் கேட்டபோது, பின்வருமாறு கூறியதை உங்கள் முன்னிலையில் கொண்டு வருவது அவசியம் எனக் கருதுகிறேன். டில்லியை ஆண்ட முகலாய சக்ரவர்த்தியாகிய அக்பர், ஒரு சமயம் நாடோன் கிராமத்தைச் சேர்ந்த தியானுபக்த் என்பவன் 1000-நபர்களோடு டில்லியில் இருந்து குதிரை மூலம் ஜுவாலாமுகி சென்றதைக் கண்டார். அவனை அழைத்து எங்கு செல்கிறாய் இத்தனை கூட்டத்தாரோடு என அரசன் வினவினான். அவனும் அடியார் கூட்டங்களும் ஜுவாலாமுகி சக்தியை தரிசிக்க செல்வதாய் சொன்னான்.


ஜுவாலாமுகி என்பது யார்? நீங்கள் என்ன பலனைப் பெறப் போகிறீர்கள் எனக் கேட்டதும், அதற்கு அவன் ஜுவாலாமுகி சக்தியே உலகத்தைக் காக்கும் தாய் எனக் கூறினான். ஜோதி சொருபமாய் எவ்வித உபகரணமுமின்றித் தோன்றி விளங்குவதாகவும் அடியார்கள் குறைகளைத் தீர்க்க வல்ல சக்தியாகவும் விளங்கும் அன்னையை தரிசிக்க வருடாவருடம் செல்வது வழக்கம் எனவும் அவன் சொன்னான்.

அதற்கு அக்பர் தாங்கள் சொல்வது உண்மையானால் தாங்கள் சவாரி செய்து வந்த குதிரையின் தலையை வெட்டுகிறேன், மறுபடியும் அந்த குதிரை உயிர் பெற்று எழ உங்களது பக்தியின் மூலம் நிரூபிக்க இயலுமா? எனக்கேட்டான்.

குதிரையின் தலை வெட்டப்பட்டதும் தியானு பக்த் அக்பரிடம் தலை வெட்டிய குதிரையை ஒருமாதக் காலம் பாதுகாத்து வாருங்கள் என விண்ணப்பித்தான். தனது பயணத்தைத் தொடர்ந்து அடியார் கூட்டத்துடன் ஜுவாலாமுகி சன்னதி சென்று இரவு முழுவதும் துதி செய்து அடிமையினது பக்தியையும், உம்முடைய சக்தி யையும் எடுத்துக்காட்ட குதிரையை மீண்டும் உயிர் பெற்று எழ அருளவேண்டும் என வேண்டிக் கொண்டான்.

அதுசமயம் தமக்கு ஒரு அறிகுறியும் காணாது போகவே தனது தலையைத் துண்டித்து சக்தியின் பாதத்தில் வைத்தும் அன்னை பராசக்தி பக்தனுக்கு காட்சி அளித்து அவனது தலையை உடலில் பொருந்தச் செய்து அதே சமயம் டில்லியில் துண்டிக்கப்பட்ட குதிரையின் தலையையும் பொருத்தி உயிர்ப்பிக்கவும் செய்ததை அறிந்த அக்பர் சக்ரவர்த்தி இவரது பக்தியின் பெருமையை உணர்ந்து தானே ஜுவாலாமுகி சென்று தேவிக்கு 1.50 மணங்கு எடையுள்ள தங்கக் குடையைக் காணிக்கையாக்கி ஆலயத்திற்கு சென்று வணங்கியதாகவும், அன்று முதல் தமது போர் வீரர்கள் அனைவரையும் அழைத்து மத வேறுபாடு இன்றி ஜுவாலாமுகியை வணங்கிட உத்திரவிட்டதகவும் வரலாறுகளைக் கேட்டறிந்தோம்.

சரித்திர வாயிலாக நிகழ்ந்த இச் செய்தியை ஊர்ஜிதம் செய்யும் வகையில் ஆலயத்தின் இடப்



புறத்திலுள்ள மண்டபத்தில் இன்றும் யாவரும் காணும் வகையில் அந்தத் தங்கக் குடை வைக்கப் பட்டுள்ளது. எங்களுக்கும் காண்பித்தனர். தங்கக் குடை வழங்கிய கொடையாளி என்னும் பெருமையைத் தங்க வைத்துக் கொண்ட அக்பரை எவ்வாறு புகழ்வது?

மறு நாள் 16.10.99 சனிக்கிழமை காலை 7 மணிக்கு பாபா பாலகநாத் எனும் பாலமுருகன் தலத் துக்குப் பேருந்தில் புறப்பட்டு, பகல் 12 மணி அளவில் அவ்வாலயத்தை அடைந்தோம். இம்மலை பழனி மலைக்கு நிகராக உள்ளது. மலை செங்குத்தாக உள்ளது. பளிங்குக் கற்களால் படிகள் அமைத்தும் ஆங்காங்கே இளைப்பாறவும் குடிப்பதற்கு நீர் வழங்கும் குழாய் களைப் பொருத்தியும் மின் விளக்குகள் பொருத்தி யும் அமைத்துள்ளனர். அடியேனது குருநாதரால் திருத் தணியில் திருப்புகழ் திருவிழா என ஒவ்வொரு வருட மும் நிகழ்த்திக் காட்டியதற்கு ஏற்ப இங்கும் அவ்வாறு நடத்த ஆலயத்தாரும் முயற்சி செய்யலாம் எனக் கூற எண்ணினேன்.

கர்ப்ப கிரகத்தின் அருகில் சென்றதும் மூலவ ராகிய பாலமுருகனை தரிசனம் செய்ய பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை என எழுதி இருப்பதைக் கண்டதும் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. இத னால் தான் இங்கு திருப்படிவிழா நடத்த வாய்ப்பு இல்லையென உள்ளுக்குள் நினைத்துக் கொண்டே அடியேன் மட்டும் கர்ப்ப கிரகத்தின் அருகில் சென்று அமர்ந்த பாபா பாலகநாதனாக இருக்கின்ற முருகனை ''உதிரும் கனியை நறும்பாகில் உடைத்துக் கலந்து தேனை வடித்து ஊற்றி அமுதினுடன் கூட்டி ஒக்கக் குழைத்து ருசி பிறந்த மதுரம் கனிந்த திருப்புகழ் பாடலில் வரும்

''உனைப் பலநாளும் திருப்புகழாலும்
உரைத்திடுவார் தம் - குளிர்மேவி
உணர்த்திய போதந்தனைப்பிரியாதுன்
பொலச்சரண் நானும் - தொழுவேனோ''

எனும் கருத்துடைய பாடலின் அடியை என்னையும் அறியாது என் நாவே சொல்லிக் கொண்டிருந்தது.

இவ் வாலயத்தின் நிர்வாகிகளையும் அரசாங்க மேற்பார்வையாளரையும் அணுகி இத்தலத்தின் வர லாறு கேட்டேன். அதுசமயம் ஆலயத்தில் உள்ளோர், இங்குதான் ஒரு மூதாட்டி கையிலையை காணச் சென்ற போது இப்பகுதியில் வந்தாகவும் மிகவும் களைப்பாக இருக்கவே அங்குள்ள ஒரு மரத்தடியில் தங்கியதாகவும், முருகனே ஆடு மேய்க்கும் சிறு பிள்ளையாக வந்து பாட்டியை நோக்கிக் களைப்பாக இருக்கிறீர்களா? எங்கு செல்லப் போகிறீர்கள்? எனக் கேட்டதும் அதற்கு மூதாட்டி அப்பிள்ளையை பார்த்து நான் சாப்பிட்டு ஏழு நாள் ஆகிறது.' மிகவும் களைப் பாக இருக்கவே ஓய்வு எடுக் கலாம் என எண்ணி சிறிது நேரம் கழித்து இங்கிருந்து கைலாயம் புறப்பட எண்ணி உள்ளேன் எனக் கூறியதும், மாடு மேய்க்கும் சிறுவன் பாட்டியை நோக்கி உங்களுக்கு தேவையான உணவுப் பண்டங்களான அப்பங்கள் எதிரே இருக்கும் மரத் தடியில் வைத்துள்ளேன் எனக்கூறினான்.

மூதாட்டியும் அப்பத்தை சாப்பிட்டு தண்ணீர் கேட்டதும் தன் கையிலுள்ள கருவியால் அச்சிறுவன் பக்கத்தில் தரையில் குத்தி நீரை வரவழைத்து தந்த தையும் கண்ட மூதாட்டிக்கு ஒன்றும் புரியவில்லை. சிறு பிள்ளையை பார்த்து நீ யாரப்பா? இந்த நேரத்தில் முன்பின் தெரியாத எனக்கு இவ்வளவு உபசாரம் செய்வது ஒரே வியப்பாக உள்ளது என்று கூறினாள். அச்சிறுவன் நான் யார் என்று தெரிய வில்லையா? என்னைப்பார் எனக் கூறினான். சிறு பிள்ளையாக வந்தவன் சாட்சாத் பாலமுருகனே என உணர்ந்து கண்ணீர் மல்கித் தோத்திரம் செய்தார்.

இவ்வரலாற்றுக்கு ஆதாரமாக இம்மலைமேல் கர்ப்ப கிரகத்தின் அருகில் கருங்கல்லினால் செதுக்கப் பட்ட சுமார் 6 அடி உள்ள மரமும் அதனடியில் உண்பதற்கு தேவையான அப்பங்களையும் அவற்றின் அருகில் ஒரு மூதாட்டி நிற்கும் நிலையில் சிறு உருவம் உள்ளதையும் எதிரே மாடு மேய்க்கும் சிறுபிள்ளை கோவணாண்டியாக இருப்பதையும் அடியேனுக்குக் காண்பித்தனர். இதுகாறும் தமிழ் நாட்டில் பௌராணி யர்களால் கூறப்பட்ட ஔவையார் சம்பந்தமான நாவல் பழச் செய்திகள் என் மனக் கண்முன் மின்னலைப் போல் தோன்றி மறைந்தது. இச் செய்தியை அங்கு ஆலயத் தாரிடம் சொன்னதும் உங்கள் பகுதியில் இந்த நிகழ்ச்சி எந்த பகுதியில் நிகழ்ந்தது என ஆதாரம் உள்ளதா எனக் கேட்டதும், பதில் சொல்ல தோன்றாமல்,

''ஆதாரமிலேன் உன் அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே''....

எனும் கந்தரனுபூதியில் வரும் பாடலை நினைவுக்குக் கொண்டுவரலானேன்.

அங்குள்ள கல்வெட்டில் இச் செய்திகள் யாவும் பொறித்திருந்ததை காட்டினார்கள். அண்மையில் கடந்த ஒரு மாத காலமாக தக்க அறிஞர்களையும் ஆராய்ச்சி யாளர்களையும் கொண்டு கல்வெட்டில் உள்ள செய்தி கள் அனைத்தையும் இந்தியிலேயே அச்சிட்டு தலப் புராணம் வெளியிடுவதாக கூறியதும் அது சமயம் இதே வரலாற்றினை ஆங்கிலத்திலும் தக்க அறிஞர் களைக் கொண்டு மொழி பெயர்த்து அச்சிட்டால் இச்செய்தி உலகம்பூராவும் அறிய வாய்ப்பு அளிக்கும் என விண்ணப்பித்துக் கொண்டேன். மேலும் ''உல கெங்கும் மேவிய தேவாலயந்தொறும் - பெருமாளே'' என்னும் அருணகிரியார் பாட்டை மெய்ப்பிக்கும் வகை யில் அமையும் என கூறினேன். ஆலயத்தார் அதற்கு இசைந்து அச்சிடுவதாகக் கூறினார்கள். புத்தகம் வெளி வந்ததும் அடியேனுக்கு 3, 4 புத்தகங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

உடனே அங்கிருந்து பிரியா விடைபெற்று நங்கல் அணைக்கட்டு எனும் இடத்திற்கு பேருந்து மூலமாக சென்று அன்று இரவே 7 மணி அளவில் நயனா தேவி என்னும் சக்தி பீடத்திற்கு பிரயாணத்தைத் தொடங்கி இரவு 9 மணி அளவில் மலையின் அடி வாரத்தில் உள்ள தேவஸ்தானத்தாரால் கட்டப்பட் டுள்ள பிரம்மாண்டமான தர்மசாலா கட்டிடத்தில் தங்கினோம், அன்றிரவு எனக்குத் தூக்கமே வராமல் பாபா பாலகநாதரின் காட்சியைத் தரிசிக்க வாய்ப்பு கிடைத்ததை கண்ணீர் மல்க

''முருகன் குமரன், குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து'' ஆட்கொண்ட

பேராற்றலுக்கு நன்றிக்கடனாக இப்பிறவியில் செய்ய இயலாவிடினும் மறுபிறவி எடுத்தாவது நிவர்த்தி செய்ய கருணை புரிய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன்.

மறுநாள் 17.10.99 காலை மலை மீது எம் பிராட்டியான நயனாதேவியை தரிசிக்கப் புறப்பட் டோம். இவ்வாலயம் மலைமேல் மிக உயரமான உயரத்தில் மக்கள் செல்வதற்கு ஏற்ற வகையில் படிகள் அமைத்து நிறுவப்பட்டுள்ளது. மலையின் உயரம் ஏறத் தாழ தமிழ்நாட்டில் உள்ள பழனி மலைக்கு நிகராக இருக்கும் எனத் தோன்றியது. இத்தலமும் நவசக்தி பீடங்களில் ஒன்றாகும். பஞ்சாப் மாகாணத்தை ஒட்டி இவ்வாலயம் சிவாலி மலைகளின் உச்சியின் நிறுவப் பட்டுள்ளது. பக்த கோடிகள் இவ்வாலயத்திற்கு செல்ல வசதியாக பேருந்துகள் உள்ளன. பேருந்தில் நங்கல் அணைக்கட்டிலிருந்து இவ்வாலயத்தின் அடிவாரத் திற்குச் செல்ல 3 மணி நேரம் ஆகும். இங்குதான் சக்தி யின் கண்கள் விழுந்ததாக அங்குள்ளவர்கள் சொல்லக் கேட்டோம். மேலும் ஆலயத்து பட்டர்களில் மூத்தவரை கண்டு இதன் வரலாற்றினை கேட்டறிய விருப்பப் பட்டேன், அவர்கள் கூறியதை இவ்விடத்தில் அறி விப்பது அவசியம் எனத் தோன்றுகிறது.

நயனா என்னும் மாடுமேய்ப்பவன், இந்த மலைப்பகுதியில் மாடுகளை மேய்க்கப் போவது வழக் கம். ஒரு மாடு பிப்பல் (அரசு) மரத்தடிக்கு சென்றதும் அங்கு நின்று தன் மடியில் இருந்து பால் சொரிவதைக் கண்ட மாடு மேய்ப்பவன் அங்கு சென்று உதிர்ந்த இலைகளை அப்புறப்படுத்தி பார்க்கையில் பிண்டி வடிவத்தில் கல்லினால் ஆன சிலை உள்ளதைக் கண்டு இங்கு ஏதோ சக்தி உள்ளது என எண்ணினான். இதனை உறுதிசெய்யும் வகையில் அங்குள்ள பட்டரும் அன் றிரவே இதனைப்பற்றி கனவு கண்டதையும் மக்க ளிடம் சொல்லியுள்ளார்.

அந்த சக்தியான பிண்டி, பட்டரிடம், தான் பிப்பல் (அரசு) மரத்தடியில் இருப்ப தாகவும், எனை வெளியே எடுத்து ஆலயத்தைக் கட் டுங்கள் என்றும், அடியார்களின் வேண்டுதலை பூர்த்தி செய்வதாகவும் கனவில் சொல்ல, மக்கள் ஒன்று சேர்ந்து ஆலயத்தை கட்டி, அதே பிண்டியை மூல விக்ரகமாக வைத்து பூஜை செய்யலாயினர். நயினா என்னும் மாடு மேய்ப்பவன், ஆலயம் உண்டாக காரணமாக இருந்ததால் இந்த ஆலயத் துக்கு நயனாதேவி எனப் பெயர் வழங்கப்பட்டதாகவும் சொன்னார்கள். ஆலயத்தில் கர்ப்பக்கிரகத்தின் பக்கத் தில் ஒரு சிறிய குகை உள்ளது. அதனை நயினாதேவி குகை என வழங்குகின்றனர்.

நாங்கள் சென்ற சமயம் 'நவராத்திரி' ஆனதால் கூட்டம் முன் கண்டிராத அளவுக்கு காணப்பட்டது. தரிசனம் செய்யவே 2 - மணி நேரம் ஆயிற்று. பகல் 1.00 மணியளவில் மதியம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அங்கிருந்து சண்டிகருக்குப் பேருந்தில் சென்றோம்.

நாங்கள் 17.10.99 அன்று சண்டிகர் என்னும் புகழ்பெற்ற நகரத்தின் அருகிலே உள்ள மணிமஜ்ரா என்னும் பகுதியிலுள்ள மானஸாதேவியின் ஆலயத் திற்குச் சென்றோம், மானஸாதேவியும் நவசக்தி பீடங் களில் ஒன்றாகும் எனக் கூறக் கேட்டோம். மேலும் நவ சக்தி பீடங்களில் இச்சக்தி பீடமே முதன்மையானதும், கீர்த்தி வாய்ந்ததும் ஆகுமென அறியக் கேட்டோம். இங்குதான் சக்தியின் தலை வீழ்ந்த இடமாகும் என்று அங்குள்ளவர்களால் கூறப்படுகிறது. பலவிதமாக வர லாறுகள் இதைப்பற்றி கூறப்பட்டிருந்தாலும் சரித்திர வாயிலான முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றினை மட்டுமே இங்குள்ளவர்கள் கூறியதை உங்கள் நினை விற்குக் கொண்டு வருவது அவசியம் என எண்ணு கிறேன்.

முகாலாய வமிசத்தினரான அக்பர் சக்ரவர்த்தி யின் ஆட்சிக்குட்பட்ட மணிமஜ்ரா என்னும் நிலப் பகுதி, இராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த நிலக்கிழார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது, கப்பம் பெறும் பொருட்டு அரசர் அங்குள்ளவர்களிடம் விவசாய தானியங்களைப் பெற்று வருவது வழக்கம், ஒரு சமயம் மழை பெய்யாமல் வறுமை தாண்டவம் ஆடிய சமயத்தில் மக்களால் கப்பம் கட்ட இயலாது போன போது அர்சரை அணுகி தங்களின் வறுமையைப் பற்றி கூறியபோதும், அரசர் அவர்களின் குறைகளை ஏற் காது சிறையில் அடைக்க உத்திரவு இட்டார். இச் செய்தி பல இடங்களுக்கும் பரவியது.

அதுசமயம் தேவி உபாசகரும், கவியுமான காரிப்தாஸ் என்பவர் மக்களை ஒன்று திரட்டி யாகம் ஒன்றை வளர்த்தார், இவருடைய யாகத்தை மெச்சி தேவி அவர்முன் தரிசனம் தந்து அவர் விருப்பப்படி சிறை யில் அடைக்கப்பட்ட எல்லோரும் வழக்காடு மன்றத் தினரால் விடுதலை செய்யப்பட்டதோடு கப்பம் கட்டு வதும் தவிர்க்கப்பட்டது. இதனைக் கேள்வியுற்ற நிலச் சுவான்தாரர்களும், ஏனைய மக்களும் ஒன்றுகூடி ஓர் ஆலயம் நிறுவி அங்கு மானஸாதேவி என்னும் திருநாமத்தோடு உருவச் சிலையைப் பிரதிட்டை செய்து வணங்கலாயினர். மானஸா என்றால் மக்க ளின் மனச்சாந்தியடையச் செய்த தேவி - சக்தி எனப் படும்.

இங்குள்ள தேவியின் அழகை, எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத் தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவி யம் போன்ற காட்சியை காண ஆயிரம் கண் படைக் கவில்லையே அந்த நான்முகன் என நினைக்கத் தோன்றுகிறது. கடைசியாக உத்திரபிரதேசத்தில் ஸகரன் பூரிலிருந்து 4 கி.மீ. தூரத்திலுள்ள சாகம்பரி தேவியின் பீடத்தைத் தரிசிக்க இயலாது போய்விட்டது, காரணம் நாங்கள் 19.10.99 அன்று டில்லியிலிருந்து சென்னைக்குப் புறப்பட முன்கூட்டியே பயணச்சீட்டை பதிவு செய் திருந்ததே காரணம் ஆகும். இதனால் இது சம்பந்தமான விளக்கங்களை அளிக்க இயலாமைக்கு வருந்து கிறோம்.

இவ்வாறு மேலே விவரித்த சக்திபீடங்களை ஒரு வித இடையூறுமின்றி அனுகூலமாகவே தரிசித்து முடிந்ததும், நவசக்தி தேவிகளை மனதார தியானித்து

''பூத்தவளே, புவனம் பதினான்கையும் பூத்த
வண்ணம்
காத்தவளே, பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே, என்றும் மூவா முகுந்தர்க்கு
இளையவளே
மாத்தவளே உனையன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே''

என்ற பாடலை உருகிப்பாடி, சென்னைக்குப் புறப்பட எண்ணி 19.10.99 அன்று மாலை டில்லியிலுள்ள மலை மந்திர் எனப்படும் (உத்திரசுவாமி மலை) முருகனை யும் வணங்கிவிட்டு, அன்று மாலையே ஜி.டி. எக்ஸ் பிரஸ் புகைவண்டி மூலம் சென்னைக்குப் புறப்பட் டோம்.

நவசக்திபீடங்களில் எட்டினை மட்டும் 15 நாட்களில் அயராது செய்த யாத்திரையின் பயனாக கண்ட ''இமாலயச் செலவு'' எனும் கட்டுரை படிப்போர்களின் மனதில் என்றென்றும் நீங்காது, நிலைத்து நிற்கும் எனக்கருதியே, சிற்றறிவுக்கு எட்டியவரையில் விளக்கமளித்து நிறைவு செய்கிறேன்.

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியால்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''

# ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஒரு சமயம் மகாவிஷ்ணு பதினாயிரம் ஆண்டுகள் அசுரர்களோடு பயங்கரமான போர் புரிந்தார். அந்தப்போரில் களைப்புற்றுச் சோர்வடைந்த மகாவிஷ்ணு, சம தரையாக இருந்த ஓரிடத்திற்குச் சென்று பத்மாசனம் போட்டு அமர்ந்தார். 'நாணோடு' கூடிய வலுவான 'வில்லை' பூமியில் ஊன்றி, வில்லின் மற்றொரு முனையைத்தமது முகவாய் பிரதேசத்தில் நாட்டி, அந்த வில்லின் நுனியில் தமது தேகபாரத்தை அழுத்தி நித்திரை செய்யலானார். அவர் மிகவும் களைப்படைந்திருந்ததால், தெய்வச் செயலாய்ப் பெருந்தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்.

அந்த சமயத்தில் இந்திராதிதேவர்களெல்லாம் ஒரு பெரிய யாகம் செய்ய வேண்டும் என்று உத்தேசித்து, யாக கர்த்தாவான மகாவிஷ்ணுவைப் பார்ப்பதற்காக வைகுண்டத்திற்குச் சென்றார்கள். அங்கு நாராயணரைக் காணவில்லை! அதனால் அவர்கள் ஞானதிருஷ்டியினால் விஷ்ணு இருக்குமிடத்தை அறிந்து அங்கு சென்றார்கள். அங்கு விஷ்ணு தம்மையே மறந்து நித் திரையில் லயித்திருப்பதைக் கண்டதும், 'அவர் தூக்கத் திலிருந்து விழிக்கும்வரை அங்கேயே காத்து நிற்க முடிவு செய்தார்கள். அதன் பிரகாரம் அவர்கள் நெடுநேரம் காத்து நின்றும் மகாவிஷ்ணுவின் தூக்கம் தெளிய வில்லை. அதனால் தேவர்கள் அனைவரும் குழப்பம் அடைந்தனர். அப்போது ஏகாதசருத்திரர் ஓர் உபாயம் சொல்ல முன்வந்தவராகத் தேவேந்திரனிடம் அவரை நோக்கி, ''சயனப்பெருமாளின் நித்திரையைக் குலைப்பது குற்றமேயாகும்; இருந்தாலும் இப்போது தேவர்கள் செய்யவேண்டிய யாகத்தை உடனடியாகச் செய்தாக வேண்டும். பூர்வத்தில் 'செல்' என்ற ஒரு ஜந்து, பிரம்மனால் படைக்கப் பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் அந்தச் செல்லுருவம் எடுத்து, பூமியில் நாட்டப்பட்டுள்ள விஷ்ணுவின் வில் நுனியை அறுத்துவிட முயலுங்கள். வில்லின் நுனி செல்லுக்கு இரையாகி அறுக்கப்பட்டால் வில்லானது மேல் நோக்கி நிமிர்ந்து, இந்த விஷ்ணுவின் தலையும் நிமிரும்; அதனால் அவருடைய நித்திரை நீங்கும். அதற்குப் பிறகு தேவகாரியம் இடையூறின்றி நிகழ முடியும். எனவே இப்போது தேவேந்திரனே செல்லுருவெடுத்து வில் நுனியைச் சாப்பிடட்டும் என்றார். உடனே இந்திரன் செல்லுருவமெடுத்து, பூமியில் நாட்டப்பட்டிருந்த வில்லின் நுனியைக் கடித்து அரித்தான். அதனால் வில்லின் 'நாண்' இற்று அறுந்து போயிற்று.

நாண் இற்றுப்போனதும் வில்லின் நுனி நிமிர்ந்து, அது நிமிரும்போது, பயங்கரப் பேரொலி எழுந்தது.

அதைக்கேட்டு தேவர்கள் நடுங்கினார்கள். சமுத்திரங்கள் கொந்தளித்துக் கரைபுரண்டன; பூகம்பம் உண்டாயிற்று; பூமிஸ்தம்பித்தது; பிரம்மாண்டங்கள் எல்லாம் சுழன்று சிதறின; புயற்காற்று பயங்கரமாக வீசியது; மலைகளும் நடு நடுங்கின; சூரியனும் அஸ்தமித்ததுபோல் இருண்டது. இவற்றை எல்லாம் கண்டு தேவர்கள் மனக்கவலையுடன் இருக்கும்போது, மகுட குண்டலங்களோடு கூடிய மகாவிஷ்ணுவின் சிரம் அறுபட்டு போன இடம் தெரியாமல் போயிற்று.

அப்போது, மகாகோரமான அந்தகாரம் (இருட்டு) சிறிது நீங்கியது. அழகு சிதைந்து, சிரமற்றதாக விளங்கும், விஷ்ணுவின் சரீரத்தைப் பிரம்மனும் ருத்திரனும் கண்டார்கள். அந்த 'கபந்தத்தை'க் கண்டு (தலை இல்லாத உடல்) தேவர்களும் சோகத்தில் மூழ்கி, 'ஓ'வென்று அழுது ''ஹா! இது என்ன? அநாதியான தேவதேவனே! உமது சிரம் எதனால் அபகரிக்கப் பட்டது? இது எந்த தெய்வத்தின் மாயச்செயல்! நீர் ஒருவராலும் சிதைக்கப்படாதவராயிற்றே? நீரே இந்தக் கதியை அடையும்போது, இனி தேவர்களின் கதிதான் என்ன? இப்போது நாங்கள் எங்கள் செய்கையாலேயே துன்புறுகிறோம். இந்தத் தீமை அசுரராலோ, இராட்சசர்களாலோ விளைந்தது அல்ல. தேவர்களான எங்களாலேயே விளைந்தது. இதற்கு யாரைப் பழிப்பது? லக்ஷ்மி பதியே! இப்பொழுது எந்த மாயையால் உம் சிரம் துண்டிக்கப்பட்டதோ, அந்த மாயை சாத்வீகக் குணமுடையதல்ல. ராஜஸ குணமுமல்ல, தாமஸ குணமுமல்ல. ஜகத்குருவான ஈசனின் மாயையே யாகும்,'' என்று பலவாறாகவும் நினைத்துப் புலம்பிக் கொண்டே இருந்தார்கள்.

அப்போது தேவ குருவான பிரகஸ்பதி ஆறுதல் கூறும் விதமாக, அவர்களை நோக்கி, ''தேவர்களே! நீங்கள் துக்கப்பட்டும், கூக்குரலிட்டும், அழுதும் பயன் எதுவுமில்லை. உலகில் தெய்வப்பிரயத்தனம், புருஷப் பிரயத்தனம் என்று இரண்டு உண்டு. இவ்விரண்டும்



சமமானவையாகையால், மனிதன் முயற்சித்தால் அதற்குரிய பயனை எவ்வகையிலாவது கூட்டி முடிப்பதே தெய்வப்பிரயத்தனமாகும். ஈஸ்வர சங்கல்பம் இன்றி எந்த முயற்சியும் நிகழாது. ஆகவே வினை காரணமாக வரும் முயற்சியும், அம்முயற்சியால் வரும் பயனும் தெய்வச் செயலேயாகும்'', என்றார்.

அதை தேவேந்திரன் ஏற்க மறுத்து, ''புருஷப் பிரயத்தனத்தை விட்டுத்தள்ளும். தேவர்களாகிய நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதே விஷ்ணுவின் சிரம் அறுபட்டுப் போயிற்றல்லவா? இதில் புருஷப்பிரயத்தனமும், தெய்வப்பிரயத்தனமும் ஒத்திருந்தால் அச்சிரம் அறுபடுமா?'' என்று கேட்டான். அப்பொழுது பிரம்மதேவன் குறுக்கிட்டு, ''காலத்தால் எந்த வினை தோன்றுகிறதோ. அதனால் வருவது நன்மை, தீமை என்ற இரு தன்மைகள் வாய்ந்தது. இவை இரண்டும் முயற்சியினால் அனுபவத்திற்கு வருவது உண்மையாகையால், அவ்விரண்டையும் அவசியம் அனுபவித்தே தீரவேண்டும்; தெய்வச் செயலை எவர் தான் மீறமுடியும்? சரீரம் எடுத்தவன் சுகதுக்கங்களை அனுபவித்தே ஆகவேண்டும். இதில் எந்தவித சந்தேகமே இல்லை. முன் ஒரு சமயம் காலவசத்தால் என் புத்தி பேதலிக்க, அதுகண்ட சிவபெருமான் என் தலையைக்கிள்ளினார். அதுபோலவே பிரகஸ்பதியின் சாபத்தால் சந்திரன் 'க்ஷய'ரோகியானான்; கௌதமர் சாபத்தால் இந்திரனும் ஆயிரம் யோனிகளை அடைந்தான். அதுமட்டுமல்ல, அதே இந்திரன் ஒருசமயம் அகத்திய முனிவரின் சாபத்தால் பூமியில் விழுந்து, பிரம்மஹத்தியினால் பீடிக்கப்பட்டு, மாலைதடாகத்திலுள்ள தாமரைநாளத்தில் வசித்திருக்கவும் நேரிட்டது. அதுபோலவே, இப்பொழுது விஷ்ணுவின் சிரமும் அறுபட்டு உப்புக்கடலிற்போய்விழுந்தது. இதுவும் தெய்வச்செயலாகும். ஆகையால் நீங்கள் கவலைப்படவேண்டாம். 'தேவி, மகாமாயை, வித்யாசொரூபிணி, சநாதநீ' என்றெல்லாம் புகழப்படும் நாராயணியைத் தியானஞ்செய்யுங்கள். நிர்குணப்பிரகிருதியான அந்தப் பரதேவதை நம் விருப்பத்தை நிறைவேற்றுவாள். சராசரமான இந்த மூவுலகமும், எந்தப்பராசக்தியால் ஜகத்சிருஷ்டி, பிரம்மவித்தையாகவும் அனைத்திற்கும் தாயாகவும் விளங்குகிறாளோ அந்தப்பகவதியைத் தியானியுங்கள்'' என்று கூறிவிட்டு, தேவகாரியம் நிறைவேற்றுவதற்காக, நான்குவேதங்களையும், தேகவுருவோடு நேரில் எதிரில்வரும்படியாகக் கட்டளையிட்டார். அவ்வேதங்களும் தேகஉருஎடுத்து வேதபுருஷர்களாக வந்துநின்றனர். பிரும்மன் அவ்வேதபுருஷர்களைப்பார்த்து, 'பிரும்மவித்தையாகவும், மகாமாயையாகவும், சர்வசெயல்களையும் சாதிக்கும் சக்திபடைத்தவளாகவும் விளங்கும் பராசக்தியைத் தோத்திரம் செய்யுங்கள்'' என்றார். அதன்படி வேதபுருஷர்களும் தேவியைப்பலவாறு தோத்திரம் செய்து துதித்தார்கள்.

தேவி, அவர்கள் முன் ஆகாயத்தில் தோன்றி இனிய வானொலியுடன் தேவர்களை நோக்கிக் கூறலானாள். 'தேவர்களே! நீங்கள் துன்பப்பட வேண்டியதில்லை! வேதங்கள் என்னை துதித்தன, அதனால் நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்தத்தோத்திரம் வேதங்களால் சொல்லப்பட்டதாகையால் வேதத்திற்குச்சமமாகும். இனிஎந்தக் காரணத்தால் விஷ்ணுவின்சிரம், அறுபட்டது என்பதைக் கூறுகிறேன் கேளுங்கள்.

ஒருசமயம் விஷ்ணுவானவர் தம் அருகிலேயே இருக்கும் லக்ஷ்மியின் மனோரம்யமான முகத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். அப்போது லக்ஷ்மி'என் பிராணபதி என் முகத்தைப்பார்த்து ஏன் ஏளனமாகச் சிரிக்கிறார்? என் முகம்என்ன காரணத்தால் அழகற் றதாகக் காணப்பட்டது? காரணமில்லாமல் என் முகத்தை ஏன் பரிகாசம் செய்யவேண்டும்? என்னை விட அழகான எவளோஒரு காமக்கிழத்தி என்னை இகழ்ந்து பரிகசிக்கும்படி இவரிடம் சொல்லியிருப் பாள்.''! என்று ஆலோசித்தாள். உடனே கோபங்கொண் டாள்; அதனால் அவள் தேகத்தில் தாமஸசக்தி வியா பித்தது. மகாலஷ்மி தமதுசக்தியால் அளவுகடந்த கோபா வேசம்கொண்டு மகாவிஷ்ணுவை நோக்கி 'என்னை பார்த்து சிரித்த உமது தலை அறுந்து போகட்டும்'' என்று நா தழுதழுக்கச் சாபமிட்டாள்'', என்று தேவி கூறினாள்:

கணவனற்றவளாக இருப்பதில் வருகிற துக் கத்தைக்காட்டிலும், காமக்கிழத்தியான, சக்களத்தியால் வரும்பொறாமை, துக்கம் அதிகக்கொடுமையானது என்று எண்ணியே, லக்ஷ்மி அவ்வாறு கூறினாள்! ஏன் என்றால் தன்சாபத்தினால் தன்கணவரையும் இழக்க நேரிடுமே! அதனால் விதவைக்கோலம் பூணநேரிடுமே என்பதைக்கூட லக்ஷ்மி யோசித்துப்பாராமல், மாற் றாளிடம் கொண்ட பொறாமைப்பகையினால் தன்கண வன் இன்னொருத்திக்கு உபயோகப்படாமல் போக வேண்டும் என்ற எண்ணத்தையே பெரிதாக நினைத்து அவ்வாறு மூர்க்காவேசத்தோடு சாபமிட்டுவிட்டாள்.

மகாலக்ஷ்மியால் மகாவிஷ்ணுவுக்கு சாபம்வந்த வரலாற்றை மகாதேவி இவ்வாறுகூறிவிட்டு, மேலும் தொடர்ந்து கூறலானாள். 'தேவர்களே!' இந்தவிஷ்ணு வின் தலையானது உப்புக்கடலில் ஆழ்ந்துபோயிற்று. இப்போது நானே அந்தவிஷ்ணுவைச் சிரத்துடன் கூடிய வராய்ச்செய்கிறன். இவற்றுக்கும் வேறுஒருகாரணம் உண்டு. அதனால் உங்களுக்கு மாபெரும் காரிய அனு கூலம் உண்டாகும், அதையும் சொல்லுகிறேன் கேளுங் கள்'' என்றாள்.

''முன்பொரு காலத்தில், பெருந்தோள்வலிமை யுடைய ஹயக்ரீவன் என்ற புகழ்பெற்ற அசுரன் ஒரு வன்இருந்தான். அவன்சரஸ்வதி நதிதீரத்தில் கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்தான். அவன் அன்னஆகாரங் களையும், எல்லா போகங்களையும், துறந்து சக்தி தேவியான எனது ஏகாக்ஷரமந்திரத்தை ஜபித்தவண் ணம் சர்வாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட எனது தாமஸசக்தியைத்தியானித்து தவம்செய்துகொண்டிருந் தான். அதனால் அந்த அசுரன் தியானித்தபடியே, நானும் சர்வாபரண அலங்கார அழகோடு தாமஸசக்தி உருவ மெடுத்து சிம்மவாகனமேறி அந்த அசுரனின் கண் முன்னால் தோன்றி, ''பாக்யசாலியே! தவவிரதனே! நீ விரும்பும் வரத்தைக்கேள், நான் தருகிறேன்'', என்றேன்.

அவன் என் இனிய வார்த்தையைக் கேட்டதும் உவகையடைந்து என்னை வணங்கி, வழிபட்டு என் னுடைய அற்புதஉருவத்தைக்கண்டு, அன்பினால் கண்கள்மலர, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து 'ஹே! தேவி! மஹாமாயே! ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத் தொழிலுக்கும், கந்த,ரச,ரூப, ஸ்பரிச சப்தங்களுக்கும், நீயே காரணமானவள் என்று பலவாறு துதித்தான். நான் அவனைப்பார்த்து, 'உன் பக்தியாலும், அருந்தவத் தாலும் நான் மகிழ்ந்தேன்; நீ விரும்பும் வரம் என்ன? நீ எதை விரும்பினாலும் அதைத்தருகிறேன்' என் றேன்.


அதற்கு அவன், 'அம்பிகையே எனக்கு மரணம் என்பதே எந்தவிதமாகவும் நேரிடாதோ அந்தவித மாகச்செய்யவேண்டும். நான் யோகியராலும், தேவா சுரர்களாலும், ஜெயிக்கப்படமுடியாதவனாகவும் என் றென்றும் அழியாத தேவத்தன்மையை அடையமுடி யுமோ அப்படிச்செய்வாயாக!'' என்று வரம்கேட்டான்.

நானும் 'பிறவி எடுத்தவனுக்குமரணம் என்பது நிச்சயமாகஉண்டு. அதுபோலவே மரமடைந்தவ னுக்குப் பிறவியும், நிச்சயமாக உண்டு. இந்த விதி முறைக்கு மாறான விதிஎப்படி உண்டாகமுடியும்? அதனால் அசுரகுலஉத்தமனே! நீ உன்மனதிற்குள் ளேயே நன்றாக ஆலோசித்துவிட்டு உனக்கு இஷ்ட மான வேறொரு வரத்தை கேட்பாயாக!'' என்றேன்.

அவன், 'தனக்கு மரணம் தன்னாலேயே அன்றி, வேறுயாராலும் விளையக்கூடாது' என்று மனதிற்குள் எண்ணமிட்டுக்கொண்டு, என்னை நோக்கி, 'ஜகதாம்பிகையே! ஹயக்ரீவனான எனக்கு ஹயக்ரீவனாலேயே மரணமுண்டாகவேண்டும், வேறு எவராலும் எனக்கு மரணம் ஏற்படக்கூடாது, இதுதான் என்விருப்பம், இதை நிறைவேற்றுவாயாக'', என்று வரம்கேட்டான்.

நானும் அவனைநோக்கி, 'பாக்யசாலியே! நீ உன் அரண்மனைக்குச் சென்று உன் ஆட்சியை நடத்து வாயாக; ஹயக்ரீவனைத்தவிர வேறு ஒருவராலும் உனக்கு மரணம் உண்டாகாது, இதுநிச்சயம்' என்று அந்த ஹயக்ரீவனுக்கு வரம்தந்து மறைந்தேன்.

ஆனால் துஷ்டாத்மாவான அவன், முனிவர் களைத் துன்புறுத்தியும், வேதங்களை நிந்தித்தும்



வந்தான். அந்த அகம்பாவியைக் கொல்லதக்கவர் மூவுலகிலும் இல்லாமற்போயினர். ஆகவே இப்போது பிரும்மதேவன் ஒரு குதிரையின் சிரசைஅறுத்து, விஷ்ணுவின் தேகத்தில் பொறுத்துவிடுவானாகில், குதிரைமுகம்படைத்தவிஷ்ணு, உடனே ஹயக்ரீவன் என்ற பெயரை அடைவார். அதன்பிறகு அந்த ஹயக்ரீவனான நாராயணர் உங்கள்நலனைக்கருதி, உங்கள் பகைவனும் பாபியும், கொடூரக்காரனான ஹயக்ரீவ அசுரனைக்கொல்வார்'', என்று தேவிகூறியருளினாள்.

தேவர்கள் மகிழ்ந்தனர் பிரம்மதேவரும், தேவர்களுக்குமுன்னால், வாளினால் ஒரு குதிரையின் தலையை அறுத்து, தேவியின் திருவருளால் அந்தத் தலையை விஷ்ணுமூர்த்தியின்கழுத்தில் பொருத்தவே விஷ்ணுவும் எழுந்தார். அதனால் அன்றிலிருந்து விஷ்ணுவுக்கு 'ஹயக்ரீவர்' என்ற பெயர் வழங்கலாயிற்று. அதன்பிறகு தேவர்களின் பரமவைரியும், மமதைக் காரனுமான ஹயக்ரீவ அசுரனை, மகாவிஷ்ணுவாகிய ஹயக்ரீவரே யுத்தம்புரிந்து கொன்றார்.

இந்த ஹயக்ரீவசரிதத்தை எவர்கள் கேட்கிறார்களோ, படிக்கிறார்களோ, அவர்கள் சகலதுக்கங்களிலிருந்தும் நீங்கிச்சுகம் பெறுவார்கள். மகாமாயா சொருபிணியாகிய தேவியின்வரலாறு பாபத்தைப் போக்குவது, தூய்மையானது, படிப்பவர்களுக்குச் சகலசம்பத்தையும் தந்தருளுவதாகும் என்று ஸ்ரீதேவி பாகவதம் கூறுகிறது.

சென்னை நங்கநல்லூரிலுள்ள 'ஸ்ரீலக்ஷ்மி ஹயவதனப்பெருமாள்' ஆலயத்தில், மாங்கல்யசரடு உற்சவம் நடத்தி, ஸ்ரீலக்ஷ்மி மீது அணிவித்த ஆயிரமாயிரம் சரடுகளை அன்னையின் அருட்பிரசாதமாகப்பெற்று சுமங்கலிகள் அணிந்து கொண்டகாட்சி காணக்கிடைக்காததாகும் என்று கூறினார்கள்.

லக்ஷ்மிஹயக்ரீவ சுவாமிக்கு மிகவும் விசேஷமானதாக, ஏலக்காய்களை மாலையாகக்கோத்து, சரம் சரமாக அணிவிக்கிறார்கள்.

பெண்கள் தாலிபலத்துக்கும், மாணவர்கள் சிறப்பாகப்படித்துப் பலன் பெறவும் வேண்டுகின்றனர்.

மேலும் வியாழக்கிழமைகளில் ஏலக்காய் மாலை சரம்தொடுத்து அணிவிப்பது விசேஷம் என்று பக்தர்கள் சொல்லக்கேட்கலாம்.

உபன்யாசம் செய்பவர்கள், அதாவது கதாகாலட்சேபம் சொல்பவர்கள், 'ஸ்ரீலக்ஷ்மிஹயக்ரீவோபாக்யானம்' என்று சொல்வார்கள்.

'லக்ஷ்மிஹயக்ரீவர்', தசாவதாரத்தில் சேர்ந்ததல்ல.

ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர், ஹயக்ரீவ அரக்கனைக்கொல்ல, ஏற்பட்ட லக்ஷ்மிஹயக்ரீவர் ஆவார். அவரைவேண்டி நலம்பெறுவோமாக!

மூன்று மதத்தினரும் பூஜிக்கும் புண்ணிய மூர்த்திஹயக்ரீவர். சரஸ்வதிதேவியின் குரு. இவர் பிறந்ததினமே திருவோணம்.

பிருமாண்டபுராணம், கருடபுராணம், தேவீ பாகவதம் முதலியவை இவருடைய பெருமையை வருணிக்கின்றன.

***

# ஸ்ரீமந் நாதமுனிகள்

- திருமதி கோமதி ராகவன், FCA

ஸ்ரீவைஷ்ணம் பிரபத்தி அதாவது சரணாகதி யோகத்தை அடிப்படையாகக் கொண்டது. கர்மயோகம் ஞானயோகத்திலும் ஞானயோகம் பக்தியோகத்திலும் பக்தியோகம் பிரபத்தி யோகத்திலும் முடிவடைகின்றன. ஆத்ம-ஈஸ்வர சித்தியானது தியானம், நியமம், சமாதிநிலை போன்ற யோகப்பயிற்சிகளால் சாத்யமாகிறது. இத்தகைய யோகக்கலையை விசிஷ்டாத்வைத கொள்கையின் அடிப்படையாக தோற்றுவித்தவர் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆவார். ஸ்ரீமந்நாதமுனிகள் வைணவ குருபரம்புரையின் முதல் ஆசார்யராவர்.

பரமயோகபுருஷரான ஸ்ரீமந்நாதமுனிகள் சுபகிருத் வருடம்(கிபி 613) ஆனிமாதம் அனுஷ நக்ஷத்திரத்தில் சோழநாட்டுக்குட்பட்ட வீரநாராயண புரம் என்கின்ற காட்டுமன்னார்கோயிலில் அவதரித்தார். அரங்கநாதன் என்ற இயற்பெயர் கொண்டதாலும், முனிவர்களில் சிறந்தவர் என்பதாலும், தமிழும் வடமொழிவேதங்களும் கூறும் பிரம்மனை நாதத்தின் மூலம் அனுபவித்தவர் என்பதாலும் இம்மூன்று காரணங்களால் இவர்க்கு ஸ்ரீமந்நாதமுனிகள் என்ற திருநாமம் பொருந்திற்று.

ஸ்ரீமந்நாதமுனிகள் இளமையிலேயே வேத சாஸ்திரம் மற்றும் யோகக்கலையைக்கற்றார். 'நியாய தத்வம்'' மற்றும் 'யோக ரகசியம்'' என்கின்ற அரிய கருத்துக்கள் நிறைந்த கிரந்தங்களை இயற்றினார். இவற்றில் ஸ்ரீமந்நாதமுனிகள் அஷ்டாங்கயோகமாகிய பக்தியோகம், ஸதங்கயோகமாகிய பிரபத்தியோகம், சிரசாஸனம், சர்வாங்காசனம், பிராணாயாமா, ஹடயோகம், ராஜயோகம், சிகித்ஸ யோகம் போன்ற யோகக்கிரமங்களைப்பற்றி விரிவாக எழுதியதாகக் கூறுவர். இவை 'நியாயா'' என்கின்ற வேத சாஸ்திரம், பதஞ்சலியோகம், புராணம் மற்றும் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டாலும் முடிவில் 'சித்த விருத்தி விஸ்தாரா'' எனப்படும் விசிஷ்டாத்வைத சித்தியைப் பிரமாணமாகக் கொண்டு புதியதொரு யோகக்கலையாகப் பரிமாணித்தது என்னலாம்.


பதஞ்சலியோகமுறையில் தியானம் செய்பவர் ஒவ்வொரு எண்ணத்தையும் படிப்படியாகக் களைந்து இறுதியாக பகவானிடம் மனதைச் செலுத்துவர். ஸ்ரீமந்நாதமுனிகளின் சித்தியோகத்தில் ஸ்ரீமந்நாராயணனின் அனந்தகல்யாண குணங்களில் மனதைசெலுத்தி அவனிடமே விருப்பமுள்ளவராக பிரபத்தி மார்க்கத்தை மேற்கொள்வர்.

'என்னிடத்திலேயே உன் மனதைச் செலுத்து; என்னிடத்திலேயே பக்தியைச்செய்; என்னைக் குறித்தே யாகம் செய்; என்னைக்குறித்தே நமஸ்காரம் செய்;

இப்படி உன் மனதை என்னிடத்தில் நிறுத்தி என்னையே நீ அடைய வேண்டிய மேலான பதவியாய் நினைத்து முயன்றால் என்னையே முடிவில் அடைவாய்'' (ஸ்ரீமத்பகவத்கீதை 8-34) என்றவாறு.

நம்மாழ்வார் 'பத்துடை அடியவர்க்கு எளியவன்'' என்றும் 'எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே ' (திருவாய்மொழி 2697) என்ற பாசுரத்தை இயற்றியவுடன் ஸ்ரீகிருஷ்ணனின் திருவிளையாடலை நினைத்து ஆறுமாதகாலம் யோகத்தில் ஆழ்ந்தார் எனக்கூறுவர். அஷ்டாங்கயோக ஸ்தாபகரான நம்மாழ்வாரை அப்பொருள்பட 'பிரபன்ன ஜனகூடஸ்தர்'' என வைணவர்கள் போற்றித்துதிப்பர். அஷ்டாங்கயோக ரஹஸ்யங்களை ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு அருளிய ஆசார்யரும் நம்மாழ்வார் ஆவார். ஆளவந்தாரும் ஸ்ரீமந்நாதமுனிகள் தோன்றிய தம் குலத்திற்கு வகுள மாலை அணிந்த நம்மாழ்வாரே ஆசார்யராவார் என 'ஸ்தோத்ரரத்னம்'' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆழ்வார்கள் காலத்தில் சோழப்பேரரசு முத்தமிழ்க்கலைஞர்களை ஆதரித்தும் கௌரவித்தும் வந்தது. அக்காலங்களில் விஷ்ணு ஆலயங்களில் திருவாய்மொழியை இசையுடன் விண்ணப்பித்து வந்தனர். மதுரகவியாழ்வார் இவ்வாறு அரங்கன்முன் திருவாய்மொழியை இசையுடன் கூடிசேவித்தார் என 'கோயிலொழுகு'' என்னும் நூல் கூறுகிறது. திருமங்கையாழ்வார் மார்கழிமாதம் திருஅத்யயன உற்சவத்தின் ஒரு பிரிவான 'இராப்பத்து'' உற்சவத்தை 'திருவாய்மொழித்திருநாள்' என்ற பெயருடன் திருவரங்கம் பெரியகோயிலில் தொடங்கிவைத்தார். இத்திருநாளன்று திருவாய்மொழி இசைஅபிநயங்களுடன் சேவிக்கப்பட்டு வந்தது. பின்பு நாளடைவில் ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் மறைந்துவிட்டன.



இவ்வாறிருக்கையில் ஒருசமயம் ஸ்ரீமந்நாத முனிகள் திருக்குடந்தை ஆராவமுதனை தரிச்சிக்கச் சென்றார். அப்பொழுது கர்நாடகத்திலிருந்து வந்த பக்தர்கள் நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழிப் பதிகமான

'ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன்
எம்மானே''

(திருவாய்மொழி 3194)

என்பதை நெஞ்சுருகப் பாடினர். ஸ்ரீமந்நாத முனிகள் 'பக்தாம்ருதமாக'' அதாவது 'ஆரா அமுதாக'' இருக்கும் அப்பாடல்கள் யாருடையவை என வினவ அவர்களும் ஆயிரம் பாசுரங்கள் உள்ளன. அவைபற்றித் திருக்குருகூரில் மதுரகவியாழ்வார் வம்சத்தினரிடமிருந்து அறியலாம் என்றும் கூறினர். ஸ்ரீமந் நாத முனிகளும் திருக்குருகூர் சென்று மதுரகவியாழ்வார் வம்சத்தினர் கூறியபடி ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பிரபந்தங்களைத் தனது யோக சக்தியால் பன்னீராயிரம் முறைசேவித்து நம்மாழ்வாரின் தரிசனம் பெற்றார். நம்மாழ்வார் ஸ்ரீமந்நாதமுனிகளின் யோகசமாதி நிலையில்தோன்றி நாலாயிர திவ்யப் பிரபந்தங்களையும், அப்பாசுரங்களின் ரஹஸ்யார்த்தங்களையும் மற்றும் அஷ்டாங்கயோகமுறைகளையும் அருளினார். நம்மாழ்வார் ஸ்ரீமந்நாதமுனிகள் அவரது திருப்பேரனாகிய ஸ்ரீ ஆளவந்தாருக்கும் யோக ரகசியங்களைக் கற்றுத்தரவேண்டும் என்றும் பவிஷ்யதாசார்யரான அதாவது பிற்காலத்தில் அவதரிக்கப்போகும் ஆசார்யரான ஸ்ரீராமானுசரின் திவ்யஅர்ச்சா அவதார மூர்த்தியையும் கொடுத்து ஆளவந்தார் வைணவதரிசன நிர்வாகத்தை ஸ்ரீராமானுசரிடம் சேர்க்கவேண்டும் என்றும் அருளினார்.

நாலாயிர திவ்யப்பிரபந்தத்தைப்பெற்ற ஸ்ரீமந்நாதமுனிகள் மார்கழிமாதம் திரு அத்யயன உற்ஸவங்களை பாஞ்சராத்ர சம்ஹிதைபடி மீண்டும் ஏற்படுத்தினார். இனி, தனுர்மாதமாகிய மார்கழி என்பது தேவருலகில் பிரம்மமுகூர்த்தம் என்று கருதப்படுகிறது. இக்காலத்தில் செய்யும் பூஜை, ஹோமம், யோகம், தியானம் போன்றவை பன்மடங்கு பலன்களைத் தரவல்லன என்பர். அதன்படி ஸ்ரீமந்நாதமுனிகள் மார்கழி சுக்லபிரதமை முதல் தசமிமுடிய 'பகல் பத்து'' உற்ஸவம் என்றும், சுக்ல பக்ஷ ஏகாதசி முதல் கிருஷ்ண பஞ்சமிமுடிய ''இராப்பத்து'' என்றும் திவ்யப் பிரபந்தங்களை முத்தமிழ் மறையாக சேவிக்கும் காலமாக நிர்ணயித்தார். இசைவல்லுனர்களாகத் திகழ்ந்த தமது மருமகன்களான மேலை அகத்தாழ்வான், கீழை அகத்தாழ்வான் இருவரையும் அரையர்கள் பீடத்தில் அமர்த்திப் பிரபந்தங்களைச் சேவிக்கச் செய்தார். பின் ஆளவந்தாரின் திருக்குமரரான திருவரங்கப்பெருமாள் அரையரும் இப்பீடத்தை அலங்கரித்தார்.

வடமொழி வேதங்களிலும் திவ்யப்பிரபந்தங்களிலும் ஞானம் பொருந்திய அரையர்கள் சேவித்த வியாக்யானங்கள் 'பகவத்விஷயமான'' ஈட்டிலும் இடம்பெற்றிருக்கின்றன. சான்றாக, பிள்ளை நறையூர் அரையர் திருவாய்மொழிக்கு இவ்வாறு வியாக்யானம் செய்தார்.

ஒரு குருவி பிணைத்தபிணை ஒருவரால்
அவிழ்க்கப் போகிறதில்லை. கர்மானுசாரமாக
வரும் பிணியும் அவனையல்லாது யாரால்
அவிழ்க்கப்படமுடியும்'' என்றவாறு.

ஸ்ரீமந்நாதமுனிகளின் சிஷ்யர்களில் முதன்மையானவர் புண்டரீகாட்சர் என்கின்ற உய்யக்கொண்டார். இவர்திருவெள்ளறை சேத்திரத்தில் அவதரித்தவர். இவர் தனது ஆசார்யரிடமிருந்து நாலாயிரதிவ்யப் பிரபந்தமும் அதன் ரகசியார்த்தங்களையும் கற்றுணர்ந்தார். ஓராண் வழி குருபரம்பரையில் இந்தரஹஸ்யார்த்தங்கள்



மேலும் விஸ்தரிக்கப்பட்டு நம்பிள்ளை காலத்தில் 'ஈடு'' என்ற நூல்மூலமாகப் பிரகாசித்தன. மற்றுமொரு சிஷ்ய ரான குருகாதிபர் என்கின்ற குருகைக் காவலப்பருக்கு ஸ்ரீமந்நாதமுனிகள் யோக ரகசியங்களைக் கற்பித்தார். இவர்க்கு ஸ்ரீ ஆளவந்தாருடன் முழுமையாகத் தொடர்பு ஏற்படாத காரணத்தால் சிலயோக ரகசியங்கள் கற் பிக்கப்படாமல் மறைந்துவிட்டன என்று ஒரு கருத் துள்ளது.

ஸ்ரீமந்நாதமுனிகளின் திருவடிகளை ஆச்ரயித்த மற்றொரு சிஷ்யர் ஈஸ்வரமுனிகள். இவர் ஸ்ரீமந்நாத முனிகளுக்கும் அவரது தர்மபத்தினியான அரவிந்தா விற்கும் புதல்வராக அவதரித்தவர். இவர் திருவாய் மொழிக்கு 'திருவழுதி நாடென்றும்'' என்ற தனியனை அருளிச்செய்தார்.

ஸ்ரீமந்நாதமுனிகளின் சிஷ்யர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் திருக்கண்ணமங்கை ஆண்டான் என்பவர். 'அகலகில்லோன் இறையும்'' என்று நம் மாழ்வார் கூறுவது போலவும் ''எத்தனையேலும் பிரி வாற்றகில்லாயால்'' என்று ஸ்ரீ ஆண்டாள் திருப் பாவையில் கூறுவது போலவும் திருக்கண்ணமங்கை ஆண்டான் இறைவனுடன் ஒரு நொடிப்பொழுதும் பிரிவில்லாமல் இறைஉணர்வுமட்டுமே கொண்டு ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்தார். பிரபத்தியோகத்திற்கு இம்மகாபுருஷர்போல் இருக்கவேண்டும் என்று பிள்ளை லோகாசார்' ஸ்ரீவசனபூஷணத்தில்'' கூறுவர்.

ஸ்ரீமந்நாதமுனிகள், வைணவ தர்சனம் ஸ்ரீராமானுசரிடம் சேரும்போது எழுபத்துநான்கு மதகு கள் அதாவது துறைகள் கொண்ட வீர நாராயணபுரத்து ஏரிபோல் அகில உலகுக்கும் பயன்பெறுமாறு அமை யும் என்று உய்யக்கொண்டாரிடம் கூறினார் என்றும் அவ்வாக்கை ஏற்று ஸ்ரீராமானுசர் வைணவம் தழைக்க எழுபத்துநான்கு ஆசார்யர்களை நியமித்தார் என்றும் கூறுவர்.

தமிழ் இலக்கிய உலகில் ஸ்ரீமந்நாதமுனிகள் மேலும் ஒரு காரணம்பற்றியும் நீங்காத இடம்பெற் றிருக்கிறார். அஃது யாதெனில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஸ்ரீமந்நாதமுனிகள் முன்பாக பங்குனி அஸ்தத் திருநாளன்று திருவரங்கம் பெரியகோயிலில் கம்பராமா யணம் அரங்கேற்றம் செய்தார்.

ஸ்ரீமந்நாதமுனிகள் பலவருடங்கள் யோகசமாதி நிலையில் இருந்து பின் தாதுவருடம்(கிபி 915) திருநாடு அலங்கரித்தார். இவரது காலம் கிபி 823-917 என் றும் சில அறிஞர்கள் கூறுவர்.

'ஸ்தோத்ர ரத்னம்'' என்னும் நூலில் ஸ்ரீஆளவந் தார் தமது பாட்டனாரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கும் தனக்கும் இருக்கும் தேஹ ஆத்ம சம்பந்தத்தை முன் னிட்டு பகவான் தனது ஆத்ம ஸமர்ப்பணத்தை ஏற்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறார். ஸ்ரீமந்நாதமுனி களை பிரபத்தி உபாயமாகக் கொண்டு ''பிதாமகம் நாதமுநிம் விலோக்ய'' என்றார். நாமும் அவ்வாறே ஸ்ரீமந்நாதமுனிகளை வந்தனம் செய்தல் நன்று.

★★★

# கம்பரின் இராமாவதாரம்

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

## குடும்பமே சொந்தமாக ஏற்றுக்கொண்ட குகப்பெருமான்

கம்பனின் ''குகப்படலம்'' மிக அழகியது. இப் பகுதியை யாவரும் விரும்பிப் படிப்பர். மாணவர் களுக்கான பாடப்பகுதியில் கூட, இதனுடைய ஓசை நயம், உணர்ச்சி, உண்மையன்பு இவற்றைக் காட்டக் கூடிய பகுதியானபடியால், அடிக்கடி கல்வியாளர் இதைச் சேர்ப்பர்.

பெரும்படையுடன் வரும் பரதனை ''இராம பிரானுடன் போருக்கு வந்துவிட்டார்'' என்று தீர் மானமாக எண்ணிச் சீறுகிறான் குகப்பெருமான். ''கூட் டங் கூட்டமாக எலிகள் வருவது போல் வருகின்ற சேனையை, பாம்பு கொத்தி அழிப்பது போல் நாம் அழிப்போம்! ஓடங்களை ஓட்டாதீர்கள். கங்கைக் கரை யில் வந்தவர்களைப் பிடித்துத் தண்ணீரில் எறிந்து விடுங் கள்'' எனத் தன் சேனைவீரர்களுக்குக் கட்டளை யிட்டான் குகன்.

''என் அருமை நாயகனான இராமபிரான் அரசு செய்ய முடியாதவாறு தடுத்த பெரிய மனிதர் வருகிறார்! அவரை எதிர்கொண்டழைக்க நம் அம்புகள்தான் செல்லும்! இராமபிரானை இவர் தீண்டும்படி நாம் விட்டுவிட்டால் நம்மை நாய்க்குகன் என ஏசிவிடுவர். (தன்னைக் காக்கும் தலைவனுக்கு, நாய் நன்றியோ டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தன் தலைவ னுக்குத் தீங்கு செய்ய வருபவன் நாய்க்கு ஏதாவது ஆகாரம் கொடுத்துப் பழக்கி விட்டால், தன்தலை வனுக்குத் தீங்கு செய்கிறோம் என்று அறியாமல் மற்றவனிடம் நன்றிக் காட்டி விட்டால் அது தனது எசமானுக்குத் துரோகம் செய்ததாக ஆகுமன்றோ! ரொட்டித் துண்டுக்கு ஆசைப்பட்டு தன் தலைவனுக்கு துரோகம் செய்யும் நாய் மாதிரி, பரதன் நமக்கு ஏதாவது பரிசில் கொடுத்து வசப்படுத்தி விட்டால் நாம் நன்றி கெட்ட நாயாகி விடுவோம்) எனவே இவர்களுடன் பேசக்கூட வேண்டாம். என்னைத் தோழன் என ஏற்றுக் கொண்ட இராம பிரானுக்காக உயிரையே விட வேண் டிய கடமையுடையவர்கள் நாம்! அரசகுலத்தவர்களின் நெஞ்சிலே வேடர்கள் செலுத்தும் அம்பு பாயாதோ! (மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும் சரம் பாயாதோ). என் உயிரையும் சேனையையும் அழித் தன்றோ இவர் இராம பிரானருகில் செல்ல முடியும்? ஆர்ப்பாட்டத்துடன் கொடியோடுவந்த சேனையை அழித்து இராமபிரா னுக்கு அரசையளித்தது வேடுவர் குலம் என்ற புகழுரை நமக்கு வரவேணும்! நாட்டைக் கொடுத்த நம் நாயக னான இராமபிரானுக்கு நாம் வாழும் காட்டைக் கொடுத்தது என்ன நேர்மை?'' என்றெல்லாம் சீறிப் பேசும் குகனை, எதிரில் சேனை யுடனும் அயோத்தி மக்க ளுடன் நின்றுகொண்டிருக்கும் பரதனுக்கு சுட்டிக் காட்டிப் பேசுகிறார் சுமந்திரன்.

''எதிர்க்கரையில் சேனையுடன் நிற்பவர் கங்கை யின் இருகரைகளுக்கும் அதிபதி. அளவில்லாத ஓடங் களுக்குச் சொந்தக்காரர். உன்தலைவனான இராம பிரானுக்கு உற்ற நண்பர். தோள்வலியுள்ளவர். ஆண் யானை போன்ற வீரமுடையவர். வில்லை ஏந்தி, வெற்றி மாலையணிந்த குகன் என்பது இவர் பெயர்.''

கங்கை இரு கரையுடையான் : கணக்கிறந்த
நாவாயான்:
உங்கள் குலத் தனி நாதர்க்கு உயிர்த்துணைவன் :
உயர் தோளான்:
வெங்கரி யின் ஏறனையான்: விற்பிடித்த
வேலையினான்:
கொங்கலரும் நறுந்தண்டார் குகனெனும்
குறியுடையான்.

★ ★ ★

திருமால் இராமபிரானாக அவதரிக்கும்போது எல்லாத் தேவர்களும் பூவுலகில் தோன்றினர். தேவேந் திரன் வாலி - அங்கதன் இருவராகவும், சூரியன் சுக்கிரீ வனாகவும், பிரமன் சாம்பவான் என்ற கரடி அரச னாகவும், சிவபெருமான் வாயுதேவனுடைய சக்தி யுடன் அனுமனாகவும் தோன்றியதாக பாலகாண்டம் கூறுகிறது. கங்கை இரு கரையுடையான் என்ற மேற் படி பாடலுக்கு, இரு பக்கங்களில் தண்ணீர் (கங்கை தண்ணீருக்குப் பொதுப்பெயர்) இருக்க நடுவில் சரவணப்பொய்கையில் பிறந்தவன். ஒரு நாக்கு ஒரு வாயிருக்க இவன் கணக்கு மீறி ஆறுநாக்கு ஆறுவாய்

களையுடையவன் (கணக்கிறந்த நாவாயான்) உன் ராமபிரானுக்கு உற்றவன். திருமாலுக்கும் முருகப் பெருமானுக்கும் உறவு என்பதை அருணகிரி தன் திருப்புகழில் மருகோனே என்ற சொல்லால் பல இடங்களில் குறித்துள்ளார். உரகபட மேல் வளர்ந்த பெரிய பெருமாள் அரங்கர் உலகளந்த மால் மகிழும் மருகோனே (அரங்கநாதப் பெருமானின் மருகன்) என்றும் திருமகள் உலாவும் இருபுயமுராரி திருமருக நாமப் பெருமாள் காண் என்றும் எந்தை வருக ரகு நாயகவருக மைந்தவருக மகனே இனி வருக என் கண்வருக எனதாருயிரே வருக - அபிராமா - இங்கு வருக அரசே வருக முலை யுண்க வருக - மலர் சூடிட வருக - எந்தை பிரிவினொடு கோசலை புகல வருமாயன் - சிந்தை மருவும் மருகா வருக! என இராமபிரானுக்கும் முருகப்பெருமான் உறவினர் எனத் திருச்செந்தூர் திருப்புகழில் பாடியருளினார். வெங்கரியின் ஏறனையான்: ஆண்யானையான விநாயகப் பெருமானின் அன்னையைத் தனக்கு அன்னையாக வுடையவன். வில்லும் வேலும் பிடித்த கரங்களையுடையவன்'' என முருகப் பெருமானே வந்ததாகவும், அதனாலே இராமபிரானைக் காண வந்தபோது தேனும் தினைமாவும் கொண்டு வந்தார் என்பது சில பெரியோர்களின் கருத்து.

★ ★ ★

சுமந்திரன் பரதனுடன் பேசும் அதே நேரத்தில் குகப்பெருமான் பரதனை உற்றுநோக்குகின்றார். மரவுரியுடுத்து, சேனைகள் சூழக் கால் நடையாக வந்ததால் தூசுபடிந்த உடலுடன் (மாசடைந்த மெய்யானை) ஒளியிழந்த நிலாப்போன்ற முகத்துடன், கல்லையும் கரைத்துவிடும் உருக்கமான பரதனுடைய தோற்றத்தைக் கண்ட குகப்பெருமானின் கையிலிருந்த வில் தானாகவே கீழே விழுந்து விட்டது. ''அந்தப் பெரியவரைக் கண்டால் இராமபிரான் மாதிரியே காணப்படுகிறார். பக்கத்திலிருப்பவரைக் கண்டால் இளையவரான இலக்குவன் மாதிரி தோன்றுகிறது. தவவேடம் பூண்டு இராமபிரானிருக்கும் திசையை நோக்கித் தொழுத கைகளுடன் நிற்கும் இவர்களை இராமபிரானுடன் போருக்கு வந்துள்ளார்கள் எனத் தவறாக எண்ணி விட்டேனே! என் பெருமானான இராமபிரானின் உடன் பிறந்தவர்கள் தவறு செய்வார்களா?'' (எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப் பென்றான்). என எண்ணி, ஒரு ஓடத்தில்தனியாக குகன் பரதன் இருப்பிடம் வந்தார். குகப்பெருமானும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்கினர். குகப்பெருமான் பரதனை நோக்கி ''இங்கு எங்கு வந்தீர்கள்'' என வினவ, ''மூத்தவனிருக்க இளையவனான அடியேனுக்கு என் தந்தையான தசரதர் அரசையளித்தார். அதனை நான் ஏற்றுக்கொண்டால் தவறாகும். எனவே அத்தவறு நேராவண்ணமிருக்க உண்மை அரசனான இராமபிரானிடம் அரசைத் திரும்ப அளிக்க வந்தேன்'' என்றார் பரதன் ''தாய் சொற்கேட்டுத் தந்தையளித்த அரசை தவறானது என நீக்கி, முகத்தில் இவ்வளவு துயரத்துடன் இராமர் உள்ள இடம் தேடி, அரசை அளிக்க வந்தீர்கள் என்றால் தங்கள் நற்குணம் எத்தகையது? ஆயிரம் இராமர்கள் சேர்ந்தால் கூட இத் தகைய குணம் வருமா? ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியேனம்மா? என ஆச்சரியத்துடன், பிரமித்துப் பேசினார். சூரிய குலத்து அரசர் அவ்வளவு பேருடைய கீர்த்தியை தங்களுடைய ஒழுக்கம் நிறைந்த கீர்த்தி வென்றுவிட்டது'' என்றார். பிறகு குகன் வழி காட்ட ஓடங்கள் இருக்கும் இடம் நோக்கி வந்தனர். பரதனும் மற்றவர்களும் வழியில் இராமன் படுத்திருந்த புல்தரையைக்கண்டு ''அண்ணா! என்னால் இவ்வளவு துன்பம் ஏற்பட்டதென அறிந்தும் காய்கனிகளை உண்டு, புல் தரையில் தூங்கினீர்களா?'' என்றெல்லாம் கதறினார் பரதன். ஒருவாறு தேறுதலடைந்து ''கூட வந்த இலக்குவன் எங்கு உறங்கி னார்?'' என்று கேட்க, குகப்பெருமான் ''அழகனான இராமபிரானும் அவளும் தூங்கக் கையில் வில்லையேந்தி, கண்ணிமைக்காமல் இருவரையும் காத்துக் கொண்டே நின்றார். இளையவர்!'' என்றார் குகன். கண்ணிமைக்காமல் காத்து நின்ற இலக்குவனை இரவு முழுதும் பார்த்துக் கொண்டே குகப் பெருமானும் தூங்காமல் ஒருபுறம் நின்றார் என்பது குறிப்பு. இராமபிரானை அழகன் என்றசொல்லால் குறித்த குகப் பெருமான் சீதாபிராட்டியை ''அவள்'' எனக்கூறியது, குகப்பெருமான் சீதாபிராட்டியை நிமிர்ந்து நோக்கவே இல்லை என்பது குறிப்பு.

வான்மீகி ராமாயணத்தில் இலக்குவன் சீதாபிராட்டியை நிமிர்ந்து பார்க்கவில்லை எனக் கூறுகிறார். கிட்கிந்தாகாண்டத்தில் சுக்ரீவன், இராவணன் எடுத்துச் செல்லும் போது தன் நகைகளை விட்டெறிந்தவற்றை இராமபிரானிடம் காட்ட, இலக்குவன் ''காது குண்டலங்களையும் கை வளையல்கள் மற்றவற்றை நான் காணவில்லை. அம்மையப்பர்களாக எண்ணி உங்களை வணங்கும்போது, காலில் உள்ள சிலம்புகளைத்தான் கண்டேன்'' எனக் கூறியதாகக் காட்டப் படுகிறது. பிறர் மனை நோக்காத இப்பெருங்குணத்தை குகன்மீது காட்டி விட்டது தமிழ் ராமாயணம். தமிழ் இராமாயணம் உத்தர காண்டத்தில் சீதாபிராட்டியை இராமபிரானின் ஏவலால் இலக்குவன் காட்டிற்கு விட்டுவரச் சென்ற போது, சீதாபிராட்டி இலக்குவனிடம், ஒரு பெண், தன் தாய்தவிர, கொண்டகணவனிடம் கூடக் கூறக் கூசும் ஒரு செய்தியைக் கூறுகிறார். ''இளைய வனே! நான் நான்கு மாத கர்ப்பவதி. உலகம் அபவாதம் கூறி விடலாம். எனவே நான் கர்ப்பவதி என்ற நிலையை, தாங்கள் ஒரு முறை உற்று நோக்கி அறிந்து

கொள்ள வேணும்'' எனக் கூற ''தாயே! உன்னைத் தாயாகவே எண்ணி வந்திருக்கிறேன். 'என்னை நிமிர்ந்து பார்' எனக் கூறுகிறீர்களே! நான் அவ்வளவு மட்ட மானவனா? நீங்கள் கருப்பவதி என்று கூறியதே போதும், உலகம் உங்களைத் தவறாகப் பேசினால் உலகையே அழித்து விடுகிறேன்'' எனக் கூறிக்கதறி னார் என இலக்குவனை மேலும் சிறப்பித்து காட்டி விட்டது தமிழ் நூல்.

★ ★ ★

இளையவர் ''காட்டிலுள்ள யாரோ வேடன் நம்மையடைந்து நிற்கிறார். அவரால் இராமபிரானுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டுவிடுமோ? என இலக்கு வன் ஐயப்பட்டு நிற்க, குகப்பெருமான் ''ஒரு தம்பி இராமபிரானைக்காட்டிற்கு அனுப்பிவிட்டார். கூட வந்துள்ள இந்தத் தம்பியான இலக்குவன் என் நாயக னான இராமபிரானுக்கு ஏதாவது தீங்கு செய்து விடு வாரோ'' என ஐயத்துடன் நிற்க, இருவரும் வில்லம் புடன் ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டு நிற்க, இவ்விருவரும் ஏதாவது சண்டையிட நேர்ந்து விட்டால் இராமபிரானுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்துவிடுமோ எனக் குகப்பெருமானுடைய சேனை வீரர்கள் வில்லுங் கையுமாய் இராமபிரானைக் காத்துநின்றனர். ஒரேநாள் இராமபிரானைக்கண்ட இவர்கள் இப்பாடுபட்டனர் எனப் பேசுகிறது ஸ்ரீவசனபூஷணம் என்ற நூல். இளைய பெருமான் குகப்பெருமானை அதிசங்கைபண்ண, இருவரையும் அதிசங்கைபண்ணி ஸ்ரீகுகப்பெரு மாள்பரிகரம் பெருமானை நோக்கிற்றன்றே. ஒரு நாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகுபடுத்தும் பாடாயிற்று. (ஸ்ரீவசனபூஷணம். 247)

இலக்குவனின் அன்புநிறைந்த சேவைபற்றிக் கேட்ட பரதன் ''நான் அண்ணனுக்குத் துன்பம் தரவே பிறந்தேன். அத்துன்பத்தைத்துடைக்க இலக்குவன் பிறந்தார்'' என உருகி எண்ணினார்.

இந்நிலையில் பரதன் முதலானோரை அழைத் துச் செல்ல எதிர்க்கரையிலிருந்து, குகப்பெருமானின் கட்டளைப்படி, ஓடங்கள் வந்தன. அனைவரும் ஓடங் களில் ஏறிக் கொண்டனர். குகன் செலுத்தும் ஓடத்தில் பரதன் - சத்ருக்னன் மற்றும் மூன்று தாய்மார்கள் ஏறிக்கொண்டனர். பக்கத்திலிருந்த ஓடங்களில் உள்ள அனைவரும் குகப்பெருமானுடைய ஓடத்திலிருந்த ஒரு அம்மையை வணங்கினர். ''இதென்ன அதிசயம்! கரையிலிருந்தபோது அவ்வம்மையை வணங்கியிருக்க லாமே'' என எண்ணிய குகப்பெருமான் நிமிர்ந்து காண்கையில் ஆகாயவீதியிலிருந்து தேவர்களும் அவ் வம்மையை வணங்கினர். ''ஓடம் தண்ணீரில் நகர நகர இராமபிரான் இருக்கும் இடம் நெருங்குகிறது. தாயே! நீ அழைத்தால் இராமபிரான் அயோத்தி திரும்பி விடுவார். எனவே இராமபிரானைதிரும்புமாறு அழைத் தருள் எனச் சுற்றத்தார் வணங்கினர். ''அரக்கர்களை அழித்து பூவுலகிற்கும் தேவர்கள் உலகான எங்களுக் கும் நன்மை செய்வேன் என்ற இராமபிரான் நாடு திரும்பினால் அரக்கர் அழியமாட்டார். எனவே இராம பிரானை நாட்டிற்கு வருமாறு அழைக்காதே'' எனத் தேவர்கள் தொழுதனர். அத்தகைய கோசலையை கண்டு தொழுது ''இந்த அம்மை யார்?'' எனக்குகன் வினவ ''தசரத சக்கரவர்த்தியின் முதல் மனைவி. இராமபிரா னைப் பெற்றதால் பாக்யசாலியாகி. நான் பிறந்ததால் அவரைப் பிரிய நேரிட்ட துர்ப்பாக்கியசாலி'' என்றார் பரதன். அன்னியன் மனைவியான சீதாபிராட்டியை நிமர்ந்து பாராது அவள் எனக் குறிப்பிட்ட குகப் பெருமான் தனது தாய் போன்ற கௌசலையைத் தொழுது நோக்கியது மட்டுமல்ல. இராமபிரானின்தாய் ''அம்மையே! கணவனை இழந்த நிலையிலா உன் னைக் காணவேண்டும்?'' எனக் கதறிக் காலில் விழுந்த குகனை, கௌசல்யா தேவி ''இவன்யார்?'' எனக் கேட்க, குகப்பெருமான் ''இராமபிரானுக்கு உற்ற நண்பன். இலட்சுமணருக்கும் சத்ருக்னருக்கும் எனக் கும் மூத்தவர்'' என்றார் பரதன். பிறப்பால் சிந்தித்தால் இராம, பரத, லட்சுமண, சத்ருக்னர். உலக வழக்கில் இராமலட்சுமணபரதசத்ருக்னர். ''இந்த நல்லவர்கட்கு நடுவில் என் பெயர் வரவேண்டாம். ஆனால் நான் உடன்பிறந்தேன் என்பதால் கடைசியில் கூறலாமே!'' எனத் தன்னைக் கடைசியாகக் குறிப்பிட்டார் பரதர். கௌசல்யா தேவி'' குழந்தைகளே! கவலையுறாதீர் கள். இராமலட்சுமணர் காட்டுக்கு வந்ததன் விளைவு எனக்கு ஒரு ஐந்தாவது மைந்தன் கிடைத்தான்!'' என மகிழ்ந்து பேசினாள்.


இராமபிரான் குகனை தம்பியாகச் சேர்த்துக் கொண்டதுமட்டுமல்ல, பரதன் 'எமக்கு மூத்தவன்'' என ஏற்றார். கௌசலையும் ஐந்தாவது மகன்! என ஏற்றார். இராமாயணம் ஏற்கனவே உலகசகோதரத்வம் பேசி விட்டதே!

(தொடரும்)

★★★

# கல்கியாய் வா கண்ணா!

**- கவிஞர் துரை. நாச்சிமுத்து**



''அறநிலை தாழ்ச்சி கண்டு
அறவோர்க்குத் துன்பம் நேரின்
அறத்தினை நிமிர்த்து தற்கும்
அறவோரைக் காப்ப தற்கும்
பிறவிகள் யுகங்கள் தோறும்
பெற்றுயான் வரு வேன்'' - என்றே
உறுதியாய்ச் சொன்ன கண்ணா!
உடனே, நீ பிறந்து வாவா!

இனத்தொடு இனத்தார் சண்டை,
ஏய்த்திடும் வஞ்ச நெஞ்சம்,
மனத்திலோ அன்பே இல்லை,
மலிந்தன கொலைகள், கொள்ளை!

குணத்தவர் மாதர் கற்பைக்
குலைத்திடும் கயவர் கூட்டம்!
பிணத்தையும் சுரண்டி வாழும்
பேயர்க்கோ அளவே இல்லை!

சாதுபோல் வேடம் கொண்டார்;
சகதிபோல் வாழ்வில் நின்றார்;
பேதங்கள் கற்பித் தாங்கே
பெரும்பெரும் பதவி வெல்வார்;
நூதன ஆயு தங்கள்
நூறெனக் கண்டார்; ஞாலம்
தீதுற நொடியில் வெந்து
தீய்ந்திடச் செய்தல் வல்லார்!
சுயநலம்; சூழ்ச்சி; ஊழல்;
சூதுகள்; பதுக்கல்; சோம்பல்;
பயங்கர வாதம் என்று
பல்கின பாரில் எங்கும்;
அயர்ந்தன நல்லோர் உள்ளம்;
அச்சமோ மனதைக் கொல்லும்;
இயல்பிலே அறவோர் இன்னும்
ஏங்குதல் எத்த னைநாள்?

கீதையில் நீகு றித்த
கீழ்மைகள் இவைதாம் அன்றோ?
மீதமும் உளதோ? எம்மை
மீட்டிடத் தயக்கம் ஏனோ?
போதையில் திளைக்கும் மந்தைப்
பொய்யரை வீழ்த்தி நன்மைப்
பாதையைக் காட்டு தற்கே
பரந்தாமா! பிறந்து வா, வா!

பொய்யையே கண்டு, கேட்டுப்
புவிமிசை உழன்ற தாலே
மெய்யையே நம்பும் ஆற்றல்
மிக்கவே இழந்து போனேன்;
ஐயனே! கல்கி யாக
அவனியில் நீவ ருங்கால்
மெய்யென உன்னை நம்பி
மேவிடும் வரமே தாராய்!

***

# வினாவும் விளக்கமும்

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt; Ph.D.,

*வினா - 18 : கீழ்க்கண்ட பெயர்களைக் கொண்டவர்கள் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?*

*அ. கஜமுகாசுரன் - கஜாசுரன்*

*ஆ. தட்சிணாமூர்த்தி - குருபகவான்*

*இ. கச்சியப்ப சிவாச்சாரியார் - கச்சியப்ப முனிவர்*

*ஈ. திருநீலகண்டர் - திருநீலகண்ட யாழ்ப் பாணர்*

*விளக்கம்:* அ. கஜமுகாசுரன் என்பவன் யானை முகத்துடன் தோன்றியிருந்த ஓர் அரக்கன். அவனை படைக்கலன்களால் அழிக்கமுடியாது. அதுபோல் அவன் உடல் மாறுமே அல்லாது அழியாது. அவன் தேவர்களை அடக்கியாண்டான். தேவர்கள் அனைவரும் அவனுக்கு முன்னால் நாள்தோறும் ஆயிரத் தெட்டுத் தோப்புக்கரணம் போடவேண்டுமென்று ஆணையிட்டிருந்தான்.

தேவர்களின் வேண்டுகோளின்படி அவனை வென்று வர சிவபெருமான் கணபதியை அனுப்பினார். ஆயுதங்களால் அவனை அழிக்க முடியாது என்பதால் தனது தந்தத்தை ஒடித்து அதனால் கஜமுகாசுரனை அடக்கினார் கணபதி. அழியாத அவன் உடல் 'மூஞ்சூறு' உருவம் பெற்றது. அவ்வுருவத்தோடு தன்னை எதிர்த்த கஜமுகாசுரனை விநாயகர் தனது அருட் பார்வையால் நோக்கி அவனுக்கு ஞானத்தைக் கொடுத்தார். அவனை விநாயகர் தனது வாகனமாகவும் ஏற்றுக் கொண்டார்.

தேவர்கள் கஜமுகாசுரன் முன்னால் தோப்புக் கரணம் போட்டார்கள் அல்லவா? அதுபோல் அவர்கள் விநாயகர் முன்னால் தோப்புக்கரணம் போட்டனர். தேவர்களின் தலைவன் இந்திரன் வேண்டியதற்கு இணங்க, தனது சன்னதியில் இருகைகளால் காது களைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடும் அனைவருக்கும் தான் உடனே அருள் செய்வதாக உறுதியளித்தார் விநாயகர்.

கஜாசுரன் என்பவன் யானையின் வடிவத்துடன் தோன்றியிருந்த மற்றொரு அரக்கன். அவனைச் சிவ பெருமான் வென்றார். அழித்தார். அவனது தோலைப் (யானைத் தோலை) போர்த்திக் கொண்டார்.

சிவபெருமான் செய்த எட்டு வீரச் செயல்களில் அவர் கஜாசுரனை அழித்ததும் ஒன்றாகும். அதனால் அவருக்கு, 'கஜசம்கார மூர்த்தி' என்ற பெயர் ஏற்பட்டது. மாதங்கம் என்றால் யானை. யானையை அழித்த சிவ பெருமானை 'மாதங்காரி' என்றனர். திருவழுவூர் என்ற இடமே சிவபெருமான் வேழம் உரித்த வீரம் புரிந்த வீரட்டானத் தலமாகும். ''மத வெங்கட் கரிஉரி போர்த்த செஞ்சேவகன்'' என்கிறது அபிராமி அந்தாதி.

தெளிவு : கணபதியால் (போரிட்டு) அடக்கப் பட்டு, (தனது) வாகனமாக ஆக்கிக் கொள்ளப்பட்ட வன் கஜமுகாசுரன்.

சிவபெருமான் வதைத்த யானை வடிவுடைய அரக்கன் கஜாசுரன்.

ஆ) சிவபெருமானின் அறுபத்துநான்கு மூர்த்தங்களில் ஒன்று தட்சிணாமூர்த்தி வடிவம். கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து சின்முத்திரை காட்டி சனகாதியர் நால்வருக்கும் ஞானோபதேசம் செய்த வர் தட்சிணாமூர்த்தி. தெற்குத் திசையைப் பார்த்து அமர்ந்ததால் தட்சிணாமூர்த்தி என்றனர். தமிழில் தென் முகப் பரமன் என்பர். ஆலமரத்தின் கீழ் அமர்ந்ததால் 'ஆலமர்ச் செல்வன்' என்றும், ஞான உபதேசம் செய்த தால் 'அறமுரைத்த பட்டர்' என்றும் அவரைப் போற்று கின்றனர். ஆதிகுரு, யோகமூர்த்தி, குருமூர்த்தி போன்ற பெயர்களும் இவருக்கு உண்டு. மேலான ஞானத்தை அருளுவதால் மேதா தட்சிணாமூர்த்தி என்றும் கூறு வர். சிவாலயங்களில் தெற்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கி இவர் அமர்ந்த கோலத்தில் காட்சி தருவார்.

குருபகவான் என்பவர் தேவர்களின் ஆசிரியர். வியாழன், தேவகுரு, பிரகஸ்பதி ஆகிய பெயர்களும் உண்டு. சிவாலயங்களில் இவர் நவக்கிரகங்களில் ஒன்றாகக் காட்சி தருபவர். வானவெளியில் இவரது இடம் மாறுதலை 'குருப்பெயர்ச்சி' என்று கூறுவார்கள். ஆண்டுக்கு ஒரு முறை குருப்பெயர்ச்சி நிகழும். நவக்

கிரகங்களில் இவரைச் 'சுபக்கிரகம்' என்பர். குருபகவான் யானை வாகனத்தின் மீது அமர்ந்திருப்பார்.

தெளிவு : தட்சிணாமூர்த்தி சிவபெருமானின் அறுபத்து நான்கு வடிவங்களில் ஒன்று. குருபகவான் ஒன்பது கோள்களில் ஒன்று.

இ) கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்தில் தோன்றி வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. பதி னொன்று அல்லது பன்னிரெண்டாம் நூற்றாண்டா கும். சிவ வேதியர் குலத்தில் தோன்றிய கச்சியப்ப சிவாச்சாரியாரின் தந்தை காளத்தியப்ப சிவாச் சாரியார்.

கந்தவேள் கனவில் கூறியபடி கச்சியப்ப சிவாச் சாரியார் தமிழில் கந்தபுராணத்தை இயற்றினார். காஞ்சி குமரக் கோட்டத்து முருகப் பெருமானே இவரது பாடல்களைத் திருத்தியும், சரிபார்த்தும் கொடுத்தான். கந்தபுராண அரங்கேற்றத்தின் பொழுதும் ஒரு புலவரின் உருவில் வந்து வீரசோழியத்தை மேற்கோள்காட்டி உதவினான் முருகன்.

சிவபுராணங்கள் பத்து. அவற்றுள் ஒன்றான மகாஸ்கந்த புராணத்தின் முதல் ஆறு காண்டங்களைக் கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழில் இயற்றினார். அண் மைக் காலத்தில் வாரியார் சுவாமிகளால் தமிழ்க் கந்த புராணம் பெரிதும் பிரபலமடைந்தது.

காஞ்சிபுரத்திலிருந்து திருத்தணியில் குடியேறி யிருந்த சைவ வேளாள மரபில் தோன்றியவர் கச்சியப்ப முனிவர். இவரது காலம் பதினெட்டாம் நூற்றாண்டு.

அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதினத்தில் சின்னப் பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகர் என்ற ஞானாசிரியரைக் கச்சியப்ப முனிவர் தமது தீட்சா குருவாகக் கொண்டார். துறவறம் மேற்கொண்ட வர் கச்சியப்ப முனிவர். சிவஞானபோத பேருரை ஆசிரியர் (மகா பாஷ்ய கர்த்தர்) ஸ்ரீ மாதவ சிவஞான யோகிகளை இவர் வித்யா குருவாகக் கொண்டு வட மொழி, தென்மொழி நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். விநாயகர் புராணம் முதலான பல அரிய நூல்களை யும் இயற்றி 'கவிராக்ஷஸ கச்சியப்பமுனிவர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

திருத்தணி முருகனிடம் கொண்ட பெரும் பக்தி யின் காரணமாகக் கச்சியப்ப முனிவர் 'தணிகைப் புராணம்' என்ற காப்பியத்தை இயற்றினார். கி.பி. 1790-ஆம் ஆண்டு சிவப்பேறு எய்தினார். இவரது சமாதி காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தில் உள்ளது.

இலக்கண இலக்கிய நயங்களில் சிறந்து விளங் கும் தணிகைப் புராணத்தை விரித்துரைப்பார் அரிது என்று திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள் குறிப் பிட்டுள்ளார்.

கச்சியப்ப முனிவரின் தணிகைப் புராணம், காப்பியக் கூறுகள், தல வரலாற்றுக் கூறுகள், இதிகாசப் புராணக் கூறுகள் அனைத்தும் நிறைந்த நூலாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தணிகைப் புராணம் குறித்து ஆய்வு மேற்கொண்ட பேராசிரியர் வ. ஹேமா அவர்கள் அதனை தல புராண, புராணக் காப்பியம் என்றும், HYBRID Literature என்றும் நிறுவியுள் ளார்கள்.

ஈ) திருநீலகண்ட நாயனார் தில்லையில் வாழ்ந்து வந்தவர். மண்பாண்டங்கள் செய்யும் குயவர் குடியில் தோன்றியவர். ''திருநீலகண்டத்துக் குயவ னார்'' என்று சுந்தரர் குறிப்பிட்டார்.

இறைவன் ஆலகால நஞ்சை உண்டு 'திரு நீலகண்டன்' ஆகிய வரலாற்றை எப்போதும் நினை வில் கொண்டு பேசியதால் நாயனாருக்கு அப்பெயரே வழங்கலாயிற்று.

ஓரிரவு அவர் பரத்தையர் இல்லத்தில் தங்க நேர்ந்தது. அதனை அறிந்த அவர்தம் மனைவி ''எமைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்'' என்று சூளுரைத்தார். அதனால் ''இனி எம் மாதரையும் சிந்தையாலும் தீண் டேன்'' என்று சூளுரைத்து அதன்படி வாழ்ந்து வந்தார் திருநீலகண்டர்.

சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுக்கும் திருத்தொண்டு புரிந்து வந்தார். ஈசன் சிவனடியார் வேடத்தில் வந்து, தமது திருவோட்டைப் பாதுகாத்துத் தரும்படி திருநீலகண்டரிடம் ஒப்படைத்தான். பின்னர் சிவபெருமான் தன் மாயையால் திரு வோட்டை மறைத்தான். திருநீலகண்டர் மீது திருட்டுக் குற்றமும் கூறினான்.

வந்த அடியவரின் திருவோட்டைத் தாம் திருடவில்லையென்று தமது மனைவியின் கையைப் பற்றிச் சத்தியம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டது. அயல் அறியாமல் காத்து வந்த அடியவரின் இரகசியத்தை அப்பலப்படுத்தினான் அம்பலவாணன். பின்னர் கணவனும் மனைவியும் மூங்கிலின் இரு முனைகளைப் பிடித்து, சத்தியம் செய்து நீரில் மூழ்கி எழுந்தனர். இறைவன் அருளால் இளமை மீண்டும் கிட்டி இனிதே வாழ்ந்தனர். ''மாது சொன்ன சூளால்

இளமை துறக்க வல்லேன் அல்லேன்'' என்று பட்டினத்தார் பாடும் சிறப்புப் பெற்றவர் திரு நீலகண்டர்.


திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் இசைக்கும் பாணர் குடியில் பிறந்தவர். அவர் தமது மனைவி மதங்க சூளாமணியாருடன் திருஞான சம்பந்தர் குழு வுடன் பல திருக்கோயில்களுக்கும் சென்றார். திரு ஞான சம்பந்தரின் பதிகங்களைத் தமது யாழில் இசைத்து மகிழ்ந்தார் திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

காரைக்காலை அடுத்த திருத்தருமபுரத்தில் பாணரின் தாய்வழி உறவினர்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வூருக்குத் திருஞான சம்பந்தர் தம் குழுவினருடன் வருகை தந்தார். பாணர் தம் யாழில் வைத்து இசைப்ப தால் திருஞான சம்பந்தரின் பதிகங்கள் ஏற்றம் பெறு கின்றன என்று ஊர் மக்கள் பேசிக்கொண்டனர். அதனால் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் உள்ளம் பெரிதும் வருந்தியது.

யாழில் அடங்காத பதிகம் ஒன்றைப் பாடும்படி அவர் திருஞான சம்பந்தரிடம் வேண்டினார். சம்பந்த ரும் 'மாதர் மடப்பிடியும் மட அன்னமும்'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். அதனை, தமது யாழில் இசைக்க முடியாததால் பாணர் தமது யாழை உடைத்து எறிய முற்பட்டார். ''இறைவன் புகழ் இசையில் அடங்காதது'' எனக்கூறிப் பாணரைத் தடுத் தார் சம்பந்தர். யாழைவிட, வலிமை பெற்றதால் அப்பண் 'யாழ்மூரிப்பண்' எனப்பட்டது.

தெளிவு :- அடியவர்களுக்குத் திருவோடு கொடுத்துத் தில்லையில் வாழ்ந்தவர் திருநீலகண்டர். சம்பந்தரின் பதிகங்களை யாழில் இசைத்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். ■

* * *



அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து பணியின்போது இறந்துவிட்ட பணியாளர் திருமதி ப. லட்சுமியின் மகள் செல்வி சுதாவிற்குக் கருணை அடிப்படையில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் பணிநியமன உத்திரவு வழங்கினார்கள். மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் அந்தியூர் ப. செல்வராசு அவர்களும் அறநிலையத்துறை அதிகாரிகளும் உடன் உள்ளார்கள்.



அருள்மிகு திருவாவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமி

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2000/WPP 283



பழநி மலைக்கோயில் தோற்றம்

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.